ஸ்ரீ
செந்தமிழ்ச் செல்வி
திங்கள் வெளியீடு

சிலம்பு ௨௬	திருவள்ளுவர் ஆண்டு ௧௯௮௫, கார்த்திகை டிசம்பர், 1954.	பரல் ௪

ஓம்

மீனாட்சிசுந்தரனார் வெள்ளிவிழா மாண்பு

பிறப்பு

இமிழ்திரைவரைப்பில் தமிழ்க்கோநகராய்த் திகழும் தகைசால் சென்னையம்பதியில் சிந்தாதிரிப்பேட்டை என்னும் திருமலிவூரின்கண் தெய்வ அருளால் சீர்சால் விழுக்குடியில் தோன்றிய செம்மல் நம் மீனாட்சிசுந்தரனாரவர்கள் ஆவர். இவர்கள் துன்ப நீக்கமும் இன்ப ஆக்கமும் தமிழ்மொழிப் பயிற்சியே தரவல்லது என்னும் தனிநோக்கு உடையவர்கள். இவர்கள் தந்தையார் பொன்னுசாமிப் பிள்ளை என்ப, இவர்தம் தாயார் திருப்பெயர் உருக்குமணி அம்மையார் என்ப. இவர்தம் தமிழாசிரியர் வேதாந்த வித்தகர், திரு. கோ. வடிவேலுச் செட்டியார் அவர்கள்.

கல்வி

எழுமையும் ஏமாப்பு அளிப்பதாகிய விழுமிய கல்வியை விழைவுடன் கற்ற விழுத்தவர் நம் மீனாட்சிசுந்தரனார். புலனடக்கம் வாய்ந்தவரே புலவரெனத்தக்கார் என்னும் மூதுரைக்கு மெய்யான எடுத்துக்காட்டு நம் சுந்தரனாரே ஆவர்; இவர்கள் இளமைமுதற்கொண்டே கல்வியை ஈன்கு கற்றுவந்துள்ளனர். தமிழில் புலவர் மேனிலைப் பட்டமாகிய எம். ஓ. எல். பட்டமும், அதனையொத்தே ஆங்கிலத்தில் எம். ஏ. பட்டமும் கட்டிளமைக்காலத்தே எய்தியுள்ளனர். பின்னர், வழக்கறி வல்லுநர், சழக்ககற்ற வழக்குரை மன்றாடி என்னும் மாண்பமை பட்டமாம் பி. எல். பட்டமும் பெற்றுள்ளனர்.

இஞ்ஞான்று ஆட்சியைப் பெரும்பாலும் மாட்சிப்படுத்த வேண்டிய இடித்துரை ஏமவல்லார் இவ்வழக்கறிஞர்களேயாவர். இவர்கள் இன்றேல் பிறழ்வதுமன்றோ பேரியல் உலகு என்னும் பெற்றியைப்பெற்று ஆட்சி சீர்குலைந்து அல்லல் உறுத்தும் என்பது ஐயமின்றித் துணிதற்கொத்த செய்தியாகும்.

தமிழ் ஆங்கிலத் தனிப்புலமை போன்று வேதாந்த சித்தாந்த தத்துவங்களிலும் தலைமைசான்ற மெய்ப்புலவர் ஆவர். மேலும் அயன்மொழித் துறைகளிலும் மயலறக்கற்று வல்ல மாண்பினர். அம் மொழிகள் பலவற்றுள்ளும் சிறந்த சிலவற்றைக் கிளந்தெடுத்துக் கூறுவாம். ஆரிய மொழியும், கேரள மொழியும், கிரேக்க மொழியும், பிரெஞ்சு மொழியும், செர்மன் மொழியும் என்னும் சிறப்புடை மொழிகளாகும்.

பன்மொழிப் புலமை

மேற்கூறிப் போந்த பல்வேறு மொழிகளைக் கசடறப் பயின்று பன்மொழிப்புலவர் என்னும் பாங்கார் பட்டமும் தாங்கினர். பட்டம்பெறுதல் யார்க்கும் எளிய. பெற்றவாபெற்ற பயனது பிறர்க்கு ஆர்த்துதல் மிகவும் அரிய என்பது பேருல கறிந்த உண்மை. நம் சுந்தரனார்க்கு அதுவும் எளியவாவது தமிழ் அன்னையின் ஆரருளேயாகும். அவ்வம் மொழியாளரும் இறும்பூது எய்தும்படி கட்டுரை எழுதியும், காவியச்சுவை காட்டியும், நாடக நுண்மை நன்கெடுத்தியம்பியும், பொருள் நூல் மெய்ம்மைகள் பொருவறப் புகன்றும், நாவான்மையும் பாவான்மையும் நலமுற நல்கியும், பேரவைத்தலைமையும் பெரும் பேச்சு நிலைமையும் பிறங்க உணர்த்தியும், பெருமக்களும் பெரும் புலவர்களும் ஒருங்குணரும் வழியாய் உளங்கொளப் புகன்றும், நூல்பல யாத்தும், நுண்ணறிவினரும் வியப்புற மாணவ மாணவியர் பல்லோர்க்குப் பல்லாண்டுகளாகப் பல்வேறிடங் களில் பகலும் இரவும் ஓவாது பாடங்கள் போதித்தும் வரு கின்றமை உலகறிந்ததொன்றே.

தொண்டு

சிந்தாதிரிப்பேட்டை உயர்நிலைப் பள்ளியை அந்நிலைக்கு உயர்த்திய ஒருபெரும் தொண்டு நம் சுந்தரனார் தொண்டாகும். இற்றைக்கு இருபத்தாறு யாண்டுகளுக்குமுன் இப் பள்ளி ஒரு சில மாணவர்களைக்கொண்ட ஓலைக்குடிலாக இருந்தது. அக் காலை யாரும் கனவுகூடக் கண்டிரார் இப்பொழுதுள்ள நிலை மையை இப்பள்ளி எய்துமெனை. நம் சுந்தரனார் இப்பள்ளியின் முன்னேற்றக் குழுவின் செயலாளராய் அமைந்தனர். 'எவ்வழி நல்லவர் ஆடவர் அவ்வழி' அஃது நல்லவாதல் அருந்தமிழ் மறை

யன்றோ! அம்முறையில் விடாதுழைத்தனர். உழைப்பே உண்மை இன்பமென உணரும் ஒருவர் நம் சுந்தரனார். அதனால் இப்பொழுது அவ்வோலைக் குடிற்சிறுபள்ளி மூன்று நூறாயிரத்து வெண்பொன்னுக்கும் மிகுதியாக மதிப்பிடக்கூடிய வானளாவிய மூன்றடுக்கு மாளிகையாகத் திகழ்கின்றது இஃது.

"அருமை உடைத்தென் றசாவாமை வேண்டும்
பெருமை முயற்சி தரும்." (குறள்: சுகக)

என்னும் செந்தமிழ்ப் பொதுமறையின் சீரிய எடுத்துக்காட்டிலக்கியமாகும் இம்மட்டோ, மாண்புறு மகளிரும் கற்றாலன்றி வாழ்க்கை செம்மையுறாதென்பது சான்றோர்க்கெல்லாம் ஒப்ப முடிந்ததொன்று, அக்குறிக்கோளையும் உளங்கொண்டு அவர் கட்கும் ஆவன அமைத்து நிகழ்த்திவருகின்றனர். இங்ஙனம் இப்பெருந்தகையார் பேரூக்கங்கொண்டு இயைந்தியக்கிவரும் கல்லூரிகள் ஆறெனத் தெரிகின்றன. இவற்றில் கற்கும் மாணவ மாணவியர் தொகை எண்ணாயிரத்திற்கு மேலென்ப. அவை முறையே: சிந்தாதிரிப்பேட்டை உயர்நிலைப்பள்ளி, சிந்தாதிரிப்பேட்டை ஆரமபப் பாடசாலை, ராவ் பகதூர் கலவல கண்ணன் செட்டியார் பெண்பாடசாலை, சிந்தாதிரிப்பேட்டை பிரைமரிப் பாடசாலை, மாண்டிசோரி பாடசாலை, வள்ளல், C. கலியாணசுந்தரம் செட்டியார் வழங்கிய ரூபா. முப்பத்தையாயிரத்தால் 'கலியாணம்' உயர்நிலைப் பெண்பள்ளி என்பன. இவர் தம் தாளாண்மைமிக்க வேளாண்மையால் தமிழ்ப்பெரும் புலவராய், பெரும் பேராசிரியராய், பாவலராய், நாவலராய், காண்பார் அனைவர்களும் செந்தமிழ்க் கற்கவேண்டுமென்னும் செவ்வியுளம் மலரச்செய்யும் சிறப்பினராய், விழுமிய ஒழுக்கமிக்கராய் ஆண்டாண்டு விளங்கும் ஆன்றோரும் பலராவர். நம் சுந்தரனார் பயன்தர நடமாடும் பல்கலைக்கழகமும், நயன்தர நடமாடும் நற்சுவடி நிலையமும் ஆவர் என்றொருவாறு அறைகுவதன்றி, யாவரே முற்றும் அறைந்திடும் நீரார் என உலகுதொழ நிற்கும் நீர்மையார்.

பணி

அண்ணாமலை நகர் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்து ஆன்றோர் விருப்பினை அகற்றற்கியலாது தமிழ்த்துறைத் தலைவராய் அரும்பணி புரிந்தனர். அக்காலைச் செய்த தமிழ்த் தொண்டு இன்றும் அமிழ்தாய் நின்று நிலவுகின்றது. அவர்கள் ஆண்டே உறையின் சென்னைமாநகர்ச் சீரிய தொண்டுகள் சிறப்பதெங்ஙனம்? மீண்டும் சென்னை போந்து தொன்மைத் திருத்தொண்டியற்றி வருகின்றனர். இந்நிலையில் 'சென்னை மாநிலக் கல்

லூரியின் தமிழ்ப் பேராசிரியராய்த்' தொண்டு புரிந்து வருகின்றனர்.

அணி

சைவத் திருமரபு தழைக்கவரு திருமடங்களுள் ஒன்றாகிய திருத் தருமபுர ஆதீனத் தலைமைத் தம்பிரான் அடிகளார் அவர் தம் கொலு மன்றத்து நம் சுந்தரனார் அவர்களை வரவழைத் தருளி நனிமிகப் பாராட்டிப் பொன்னாடை போர்த்துப் புகழணி சூட்டியருளினர். இது போலவே திருக்குன்றக்குடி ஆதீனத் தம்பிரான் அடிகளாரும் தம் மன்றத்துப் பொன்னாடையும் புகழணியும் அருளிப் பாராட்டினர். இத்தகைய பாராட்டுக்கள் நம் சுந்தரனார்க்கு எய்தியன எண்ணிறந்தன.

பாராட்டு

நம் சுந்தரனார் கல்விக்குக் கண்ணும் கருத்துமாய் இருபத் தைந்தாண்டு உழைத்தமையைப் பாராட்டி வெள்ளிவிழாக் கொண்டாட்டம் மிக்க சிறப்பாக 4—12—1954-இல் நிகழ்ந் தது. இவ் விழாச் சிந்தாதிரிப்பேட்டை உயர்நிலைப் பள்ளியிற் றுவங்கிற்று. ஆசிரியர், மாணவர், புலவர், பெருமக்கள் அளவின் றிக் குழுமினர். முதலமைச்சர், திரு. காமராசரவர்கள் பேரமைத் தலைமை பூண்டார்கள், கல்வியமைச்சர் திரு சி. சுப்பிரமணியம் அவர்கள் சுந்தரனார் உருவச் சிலையைத் திறந்து வைத்தார்கள், திருவாளர் துரை அரங்கனார் அவர்கள், பேராசிரியர் சொல்லின் செல்வர் ஆர். பி. சேதுப்பிள்ளையவர்கள் பாராட்டிப் பயனுரை பகர்ந்தனர். சேதுப்பிள்ளையவர்கள் வெள்ளிவிழாக் குழுவினர் சுந்தரனார் நூல்களுள் சிலவற்றைத் தொகுத்து நான்கு நூல்க ளாக வெளியிட்டுள்ளனர். அந் நூல்கள் சுந்தரனார் அறிவுத் திருமேனியாகும். அதனைத் திறந்து வைத்துப் பாராட்டினார் சொல்லின் செல்வர். அப் புத்தகங்கள் வருமாறு. "நாடுங் காமமும், நீங்களும் சுவையுங்கள், நற்றிணை நாடகங்கள், தமிழா நினைத்துப் பார்" என்பனவாகும்.

தருமபுர ஆதீனத் தலைவர் சார்பில் சிவத்திரு, சோமசுந்த ரத்தம்பிரான் அடிகள் பொன்னாடை போர்த்திப் புகழ்ந்து வாழ்த்தினர். விழாக் குழுவினர் நம் சுந்தரனார் திருப் பெய ரால் அமைக்க இருக்கும் அரும்பணிகள் : கட்டுரைகளைத் தொகுத்து நூல்களாக வெளியிடுவது. அவர் தம் உருவச் சிலையை நாட்டுவது, அவர் திருப் பெயரால் ஏழை மாணவ மாணவியர்க்கு உதவிச் சம்பளம் உவந்தளிப்பது, பெண் பாட சாலையில் சுந்தரனார் வெள்ளிவிழா மண்டபம் அமைப்பது முதலியன.

பல்வேறு கல்லூரிகள், மன்றங்கள், கழகங்கள், தக்கார், தாழ்விலாச் செல்வர், சான்றோர், மாணவர், பெருமக்கள் முதலாயினவர்களால் படித்தளித்த வாழ்த்து மலர்களும், மலர் மாலைகளும் பிறவும் அளப்பில. சுந்தரனார் செவ்விய இனிய எளிய நடையில் தக்கவாறு விடையிறுத்தார்கள். எல்லாம் மாணவக் குழந்தைகளுடன் மருவி வாழ்ந்த வாழ்க்கையின் பெறு பேறே என்னை இந்நிலைக்கு ஆளாக்கியது. குழந்தை யுள்ளம் யாவர்களையும் குழைவிக்கும் என்பது மெய்ம்மையாம் அல்லவா! என்று மொழிந்தனர்.

பண்பாடு

என்றுமுள தென் தமிழைக் கற்றுவல்ல ஏருடையார் அடக்கத்தின் அணியாம் எளிய வாழ்க்கை வாழ்வமைந்த அவர்தம் இயல்பு. அத்தகைய வாழ்க்கையை வாழ்ந்து காட்டுகின்றனர் நம் சுந்தரனார். நாவலந் தீவாம் நாட்டுப் போரில் காந்தியடிக ளார் கொள்கையைப் பின்பற்றி விழுச் சிறை சென்று மீண்ட னர். நாட்டு நலமலாமல் தனக்கெனை எந்நலமும் வேண்டா விழுத்தவர். 'இதுவே தமிழர்தம் தகைசால் மறமாண்பு.

"நகையீகை இன்சொல் இகழாமை நான்கும்
வகையென்ப வாய்மைக் குடிக்கு" —திருக்குறள்: ௯௫௩

என்னும் நாயனார் நற்றமிழ் மறையின் பண்பாட்டுருவே நம் சுந்தரனார்.

வேண்டுகோள்

சிறப்பீனும் செம்பொருளின் திருவருளால் நம் சுந்தரனார் பல்லூழி பயனுற வாழ்ந்து பணி பல புரிவாராக. வட நாட்டுத் தத்துவக் கொள்கை விவேகாநந்த அடிகளால் மேலைநாட்டில் பரவி வீறுபெற்று விளங்குவதுபோல் தென்றமிழ் நாட்டு மெய்க்கொள்கையாம் சித்தாந்த சைவம் மேலைநாட்டிலும் உலகெங்கணும் நம் சுந்தரனாரால் வீறுபெற்று விளங்கி விழுப்ப முற எல்லாம்வல்ல இறைவன் நல்லருள் புரிவானாக. ஆதீன கர்த்தர்களும், அரும்பெரும் செல்வர்களும், ஆட்சி அறவோர் களும், பெருமக்களும் அவர்கட்கு வேண்டுவன புரிந்து துணை செய்வார்களாக. மீனாட்சி சுந்தரனார் மெய்த்தொண்டு வாழ்க. மேலும் பொன்விழா, மணிவிழா, வயிரவிழாப் பெற்றும் பொலிந்து வாழ்க, வாழ்க.

வாழ்க நற்றமிழ்! வாழ்க சுந்தரனார்!

கல்கியின் மறைவு

வரலாறு

'கல்கி' ஆசிரியர் திரு. ரா. கிருட்டின மூர்த்தியவர்கள் மாயூரத்தின் அண்மையிலுள்ள புத்தமங்கலத்தில் 1899 ஆம் ஆண்டு புகழுடன் பிறந்தார். மாயூரம் நகராண்மைப் பள்ளியில் கல்வி பயின்றார். திருச்சிராப்பள்ளியில் கல்லூரிப் படிப்புக் கற்றார். இடைநிலை என்னும் இண்டர் மீடியட்வரை பயின்றார். 1921 இல் ஒத்துழையா இயக்கத்திற் கலந்து கல்லூரிப் படிப்பைக் கைவிட்டனர். ராஜாஜி, திரு. இரமசாமி நாயக்கர் இவர்களின் தலைமையில் காங்கிரசுக் காரியாலயத்தில் பணிபுரிந்தனர். திரு. வி. க. அவர்கள் நடத்திவந்த 'நவசக்தி'யில் இதழாசிரியராய்ப் பணிபுரிந்தனர். ராஜாஜி அவர்களால் துவங்கப் பெற்ற திருச்செங்கோடு ஆசிரமத்தில் நாட்டுப்பணி புரிந்தனர். அங்கே ஆறு ஆண்டுகள் அரும்பணி புரிந்தனர். கட்குடி ஒழிப்பின் பொருட்டுத் துவங்கிய 'விமோசனம்' என்னும் வெளியீட்டுக்கு ஓராண்டு ஆசிரியராகப் பணிபுரிந்தனர். அத்துடன் சென்னை 'ஆனந்த விகடனு'க்குக் கதை கட்டுரைகள் எழுதிவந்தனர்.

பணி

பின்பு 'ஆனந்த விகடன்' ஆசிரியராக அமர்ந்து நிரம்ப வேலை செய்தனர். அருந்தமிழுக்கு அரிய பணிசெய்யும் உரிய செவ்வியுமாக இஃதமைந்தது. காலப்போக்குக்குத் தக்கவாறு எளிமையும், இனிமையும், நகைச்சுவையும், நாடக அமைவும், உரையாட்டொண்மையும் பிறவும் பொதுள முழுமுயற்சியுடன் பணியாற்றினர். ஆங்கிலமும் தமிழும் கலந்து அயன்மொழி மயல்கொண்ட மயிலாப்பூர் அறிஞரானோரும் வியப்புற கலவாத் தமிழின் கட்டுரைகளும் பிறவும் ஆக்கினர். அவர்களும் மயல கன்று தமிழின் செயல் புகன்று கைக்கொள்வாராயினர். ஆங்கிலத்திலே படித்தவர் தமிழிலும் படித்து அகமகிழ ஆக்கிய ஆற்றல் வாய்ந்தவர் நம் கல்கியார். இஃதொன்றே அவர்தம் அருந்தமிழ்த் தொண்டினுக்குப் பெரும் எடுத்துக்காட்டாகும்.

உரிமை

"கல்கி" என்னும் உரிய வெளியீட்டினை 1941-இல் தொடங்கினர். தொடக்கத்தில் திங்களுக்கு இருமுறையாக வெளிவந்தது. பின்னர் மும்முறையாக வந்துளது. இப்பொழுது கிழமை வெளியீடாகத் திகழ்கின்றது.

பயனார்தொண்டு

நாட்டுப்பற்று மிக்கவர் நற்றமிழ்ப்பற்று அற்றவராய்
மொழிப்பற்று வேறு நாட்டுப்பற்று வேறு என நவிலுவதும்
செய்வர். அக்குறையினை நீக்கி இரண்டையும் இருகண்போல்
இயைத்து ஒழுகிக் காட்டியவர் நம் கல்கியாரே யாவர். நாட்டுப்
பற்று உடலாகவும், மொழிப்பற்று உயிராகவும் உடங்கியைந்து
நடைமுறைக்குக் கொண்டு வருவதாலேயேதான் உண்மை நலம்
எய்தி எல்லாரும் இன்புறுதல் கூடும் என்னும் வாய்மைகண்
டொழுகியவர் நம் கல்கியாராவர். தாய்மொழியின்கண் தனிப்
பற்றில்லாதவர் பிறமொழியாளரால் நன்கு மதிக்கப் பெறார்
என்பது நானிலமறிந்த மேனிலை உண்மை. அவ்வுண்மையினை
நாட்டுக்குணர்த்தி விழிப்புண்டாக்கியவர் நம் கல்கியார். புனை
கதை புனைவாரும், கற்பனை நாடகம் அமைப்பாரும் அவ்வவற்றிற்
குரிய உறுப்பினர்தம் பண்புகளை இழிவுபடுத்தாது இயல்பமை
விழுமிதாக்கி வெளிப்படுத்துவதே வேண்டத் தக்கது. அவ்வுண்
மையுணர்ந்து கையாண்டு காட்டியவர் நம் கல்கியாராவர். இவை
போன்று நுனித்தறிந்து நுவன்று மகிழ்விப்பதே கல்கியாரின்
பெருந்திறலாகும்.

'பாரதியார்' புகழ் நிறுவும் பணியில் சார்ந்து பொருள்
திரட்டி அன்னார் பிறப்பகமாம் எட்டயபுரத்தில் மண்டபம்
அமைத்தனர். அவர் தம் குடும்பத்தார்க்கும் உதவி அளித்
தனர். பல இலக்கிய இயக்கங்களிலும் பங்கெடுத்துப் பணியாற்
றினர். கம்பர் கழகத்தின் தலைவராய்த் தக்கன புரிந்தனர்.
அண்ணாமலை நகரில் நடைபெற்ற எழுத்தாளர் மாநாட்டில் தமிழ்
இலக்கிய முதல்வர்களை அழைத்துச் சென்று தமிழின் பெரு
மையை வடநாட்டினரும் உணரும்படி செய்தனர் என்ப. சென்
னைத் தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் தலைவராகக் கடந்த நான்கு
ஆண்டுகளாக நற்பணி புரிந்துவந்தனர். காந்தியடிகளின் நினைவு
அமைப்பில் பல பெரியார்களையும் இணைத்து உருப்பெறச்
செய்து விளங்கினார். கப்பலோட்டி சிதம்பரனார் கல்லூரியின்
தோற்றத்தில் இவர் தம் முயற்சியுமுண்டு. திரு, வி. க. நினைவு
அமைப்பிலும் பெரும்பங்கெடுத்துக்கொண்டார். ராஜாஜியின்
வலதுகைபோன்று விளங்கி வந்தார். 1927, 1930, 1940 ஆகிய
ஆண்டுகள் நிகழ்ந்த காங்கிரசு இயக்கத்தில் கலந்து கொண்ட
னர். அதன் பயனாகச் சிறைசென்று வந்தனர்.

எழுதிய நூல்கள்

கள்வனின் காதலி, சாரதையின் தந்திரம், மோகினித்தீவு,
பார்த்திபன் கனவு, சோலைமலை இளவரசி, சிவகாமியின் சபதம்,

மருடமதி, அலேயோசை முதலியன. தன் முயற்சியால் முன்னுக்கு வந்து பொன்னும் பொருளும் புகழும் பெற்று மிக்கு விளங்கிய சிலவருள் இவரும் ஒருவராவர். ஏனைத் தாளாண்மையாளர்கள் உலையாமுயற்சி மேற்கொள்ள முன்னிலைப் படிமமும் இவரேயாவர்.

பேரா இயற்கை

சில திங்கள்களாக நோய்வாய்ப்பட்டிருந்தனர். சென்னை முதன்மை மருத்துவமனையில் தங்கி மருந்துண்டு நலமெய்தினர். மூன்று கிழமைக்கு முன்புதான் காந்தி நகரின்கணுள்ள தம் இல்லம் வந்துற்றனர். 5. 12. 1954, வைகல் மணி4-45-க்குத் திடீரென ஆவிநீத்தனர். எல்லோரையும் அவர் பிரிவு ஆற்றொணுத் துயரில் ஆழ்த்தியது. அவர்தம் இறுதிச்சடங்கு முறையாக நிகழ்ந்தது. பிரிவு குறித்து வருந்திப் பலரும் பேசினர். ராஜாஜியவர்கள் பிரிவுத் துன்பத்தால் பேசவொண்ணுத தன் நிலைமையை எழுதிக் காட்டினர். சென்னை ஆட்சி முதல்வர் சார்பாக அவர் தம் மெய்காப்பாளர் மாலைபோட்டு மதிப்பளித்தனர். வந்து பேசிப் பரிவுணர்த்திய பெருமக்களிற் சிலர் வருமாறு:

திருவாளர்கள் பக்தவத்சலம், பரமேசுவரன், ஜே. சிவசண்முகம் பிள்ளை, எஸ். எஸ். வாசன், டி. கே. சண்முகம், ம. பொ. சிவஞான கிராமணியார், முசிரி சுப்பிரமணிய ஐயர், எம். ஆர், வேங்கடராமன், பி. இராமமூர்த்தி, சதாசிவன், புத்தனேரி சுப்பிரமணியம், என். சஞ்சீவி, வி. பி. கோதண்டராமன், திருமதி. எம். எஸ். சுப்புலட்சுமி முதலியோர்களும் பல எழுத்தாளர்களும் ஆவர். இவர்க்கு அகவை ஐம்பத்தைந்து, இத்தகைார்க்கு அரும்பெறல் தாயரும், அகமுறு மனைவியும், ஒருமகனும், ஒருமகளும் உளர். இவர் தம் ஆவி இறையடி நீழலில் முறையுறும் இன்பு எய்துவதாக. அவர் தம் குடும்பத்தார்க்கு எம் பரிவும் ஆறுதலும் உரியவாகுக.

மரமனிதன்

[வித்துவான், திரு. செந்துறை முத்து]

இத்தலைப்பை நோக்குங்கால் இரும்பு மனிதனைப் போன்ற தொரு "மரமனிதனோ" என்று ஐயுறல்கூடும். அற்றன்று. இரும்பு மனிதன் செயற்கையின்பாற்பட்டவன். மரமனிதன் இயற்கையின்பாற்பட்டவன். இயற்கையின் செயலுக்கு இலக்காகி இம் மண்ணில் தோன்றிய மனிதனை மரத்தின் உவமையைக் கொண்டு கூறப்படுவது. மரத்தை உவமையாகக் கூறுவதின் மூலம் அம் மனிதனை மரமென்றே நிலைநிறுத்துவது. ஆறறிவு பெற்ற மனிதனுயிற்றே, அவனை அங்ஙனம் கூறலாமா? அங்ஙனம் கூறப்படும் மனிதன் எவன்? என்றெல்லாம் வினவின் அவ்வினாக்களுக்கு ஏற்புடைய அழகான மாற்றங்கள் தென்படு கின்றன. இதை மாண்புடைய மக்கட்பிறவி எடுத்த ஒவ்வொரு வனும் தன் அனுபவத்தின் வாயிலாகவும், அன்றாடநிகழ்ச்சியின் வாயிலாகவும் அறிதல் கூடும். எனினும் ஒருவாறு அம் மர மனிதர்களின் இயல்புகளையும், அவர்களிடம் பண்புடைய மக்கள் நடந்துகொள்ள வேண்டிய நெறிமுறையையும் விளக்க முயலுவாம்.

அளவற்ற கேள்வியறிவு உடையவராக இருப்பினும், கல்வி யின் நல்லிடமாகத் திகழினும், பொன், மணி முதலான பொருள்கள் பெற்றிருப்பினும், பணியாற்றும் பணியாளர் பலர் இருப்பினும், அறிவில் சிறந்து அறிஞராக இருப்பினும், பெருமையளிக்கும் நெறிகள் பல இருப்பினும் பெருவுயர் வளிக்கும் உயிர்ப்பொருளான நற்பண்பு (மக்கட் பண்பு) இல்லா விடின் மேற்கூறிய தகுதிகள் அனைத்தையும் அகற்றி அம் மனிதரை 'மரம்' என்று அழைக்க அஞ்சவேண்டாம் என்பது தான் செந்நாப்போதாரின் செம்மையான கருத்து.

மானிடப் பிறவி சிறப்புடைத்தென்பது மெய்தான். மறுக்க இயலாது. காரணம், மற்றெவ்வுயிருக்கும் அமையாத மனவுணர்வெனப்படுகின்ற ஆறுவது அறிவாகிய பகுத்தறிவுப் பண்பு என்பது ஒன்றிருப்பதேயாகும். ஏனைய உயிர்களுக்கு இவ்வறிவின்று; ஆயின் அவ்வுயிர்களுக்கும் இயற்கையால் அரு ளப்பட்ட புலமையுண்டு. அவற்றில் பாகுபாடுமுண்டு. அஃதா வது ஓரறிவுயிர், ஈறறிவுயிர், மூவறிவுயிர், நாலறிவுயிர், ஐயறி வுயிர் என்பவையாகும். இவற்றில் ஓரறிவுடையதுதான் மரம்

என்பது. அவ்வோரறிவு யாதெனின் மரத்தைப் பிறிதொரு பொருள் தீண்டும்பொழுது அல்லது துண்டிக்கும்பொழுது அதனிடத்தில் ஒருவகையான மாற்றத்தைக் காணுகின்றோமே அதுவேயாகும். இஃதொன்றைத் தவிர ஏனைய மெய், வாய், கண் மூக்கு, செவி என இவற்றால் நுகரப்படும் அறிவு அதற்கின்று. இவ் வாறறிவும் நிரம்பப் பெற்றவன்தான் மனிதன்.

இங்ஙனம் அறிவினாலும் உருவினாலும் ஒட்டாத நிலையில் நெடிதுநிற்கும் இவ்விரு உயிரையும் ஒன்றுபடுத்திக் கூறத்தக்க ஒப்புமை யாது? ஈண்டு அவ்வொப்புமைக் கருத்தாகிய நுண்மைக் கருத்துத் திண்மைபெறுகின்றது. மனிதனுக்கமைய வேண்டிய நற்பண்பு அமையப்பெறாத மனிதனை இழிநிலையுடைய மரத்துடன் சேர்த்துவிடுகின்றார் குறளாசிரியர், அங்ஙனம் கூறுகின்றாரெனில் மனிதப் பண்பற்ற மகனைக் குறித்து வள்ளுவரின் உள்ளத்தன்மையை உய்த்துணரக்கூடுமன்றோ?

> “அரம்போலும் கூர்மைய ரேனும் மரம்போல்வர்
> மக்கட்பண்பு இல்லா தவர்.”

வள்ளுவரின் சொல் ஒவ்வொன்றும் பொருட்செறிவு மிக்கது என்பது பலருக்கும் புலப்பட்டதே. இக் குறட்பாவின் கண் அரத்தைப் போன்ற கூர்மைபடைத்த புலமையுடையவரேனும் மனிதனுக்கு அமையவேண்டிய மக்கட்பண்பு இல்லாவிடின் அம் மகன் மரத்தைப் போன்றவன் என்று சுருக்கமாகக் கூறுகின்றார். இனி ஓரளவு இச் சுருக்கத்தின் பெருக்கத்தை நோக்குமின்.

“அரம்” என்பது திண்மையும் கூர்மையும் உடையது என்பது யாவருக்கும் தெளிவு. அது தன்னுடைய கூர்மையினால் ஏனைய உலோகப் பொருள்களைத் துண்டிக்கும் ஆற்றல் பெற்றது. தன்னைப்போன்று அவற்றைக் கூர்மைப்படுத்தும் தன்மைபெற்றது. அதே தருணத்தில் தனக்குக் கேடின்றித் தன்னைப் பாதுகாக்கும் பண்புடையது என்று அரத்தின் இயல்பை அறிவுறுத்துகின்றார்.

“அரம்போலும் கூர்மையர்” என்கின்றார். “கூர்மையர்” என்றுணர்த்துவது மதிநுட்பமிக்க மனிதனையேயாகும். கூர்மையான புலமைமிக்க மக்கள், பலராலும் பன்னெடு நாட்களாகக் காணவொண்ணா அரிய உண்மையைக் கண்டுணர்த்துவரன்றோ! அவர்களின் கூர்மைப் புலமை கதிரவன் ஒளியினும் துருவிச் செல்லுமன்றோ! எனவேதான் அவர்களைக் கூர்மையர் என்றார். இப்புலமைமிக்க மக்களுக்கு ஓர் உவமைகூற விழைந்தார். கூர்மைமிக்க அரத்தையே உவமையாக உரைத்துவிட்டார்.

இப் புலமைமிக்க பெருமக்களை மிகக் குறைந்த அறிவுடைய மரத்துடன் சேர்த்துக் கூறுகின்றாரே என்று உன்னும்பொழுது தான் வியப்புத் தோன்றும்; ஆயின் வள்ளுவரின் உள்ளக் கிடக்கை முழுவதும் உணருமிடத்து அவ்வியப்பு விடைபெறும்.

ஒவ்வொரு உயிருக்கும் இயற்கையளித்த பண்புண்டு. அவ்வவ்வுயிரும் தத்தமக்குரிய பண்பிற் றவறும்பொழுது பிற உயிரால் இழித்துரைக்கப் படுகின்றது. மனிதனுக்கென் றமைந்த மக்கட் பண்பிற் றவறிப் பண்பாட்டிற் கொவ்வாத நிலையில் ஒழுகும்போது 'ஏ....கழுதை' 'ஏ....மாடு' 'ஏ....மரக்கட்டை' என்று விளிக்கப்படுதலைக் காணுகின்றோம். கூர்மையான அறிவுபெற்ற பெருமகனும் பண்பிற் றவறி ஒழுகுபவரை வள்ளுவர் கண்டு உள்ளம் நொந்தார். எனவேதான் அழுத்தந்திருத்தமாக எவராலும் அகற்ற முடியாத நிலையில், அடித்துக் கூறுவது போல் "கூர்மையரேனும் மரம்போல்வர்" என்று கூறினார்.

"மரம்" என்று உரைத்தது, மரம் தன்னிடத்தில் மேல் நோக்கியுள்ள, பலரும் விரும்பும் நிலையுள்ள பல உறுப்புகளாகிய கொம்பு, இலை, பூ, காய் என இவையிருக்க, இவற்றினால் தனக்குத் தேவைப்படும் வளத்தைத் தேடிக்கொள்ளாது இற்றையொழித்து, கீழ்நோக்கியுள்ள, பலரும் விரும்பமுடியாத நிலையுள்ள மண்ணில் மறைந்திருக்கும் தன் வேரினால் தனக்கு வேண்டிய வளத்தை நாடி அடைகின்றது என்று அதன் இயல்பை மறைவாக உணர்த்தி, ஒரு மனிதன் தன் பெருமைக்குரிய உயர்வளிக்கத்தக்க பலரும் விரும்பத்தக்க நற்பண்பையும், நற்செயலையும் விரும்பாதொழித்துக் கீழ்நிலை நோக்கிச் செல்லும் பண்பையும் பணியையும் ஏற்றொழுகும் நிமித்தத்தான் "மரம்போல்வர்" எனப் புகன்றார்.

அதன் பின்னர் "மக்கட்பண்பு இல்லாதவர்" என்று விளம்புகின்றார். மக்கட்பண்பு என்பது இயற்கையாக அமையப் பெற்ற அன்பினிடத்தில் உருப்பெற்றெழும் ஓர் உயர்ந்த குணம். இயற்கையன்பு அழியாது நிலைக்குமாயின் பண்பு சிதையாது பொலிவுறும். அன்பு சிதைந்தால் பண்பு குன்றும். அன்பும், அவரிடத்து வளர்ந்த பண்பும் குன்றுதிருக்குமாயின் அவரிடத்தில் இரக்கம், கருணை முதலான எல்லாக் குணங்களும் அமைந்துவிடும். எனவே, அன்புமிக்க பண்புதான் அமையப் பெறுதல்வேண்டும். ஈண்டு வள்ளுவரும் அதனைத்தான் காட்டுகின்றார். அஃதாவது எல்லையற்ற கல்விகற்றுப் புலமைமிக்கவராக இருப்பினும் மக்களை மக்களாக மதிக்கும் பண்புவேண்டும். ஒத்தவனையுணரும் மாண்புவேண்டும். மற்ற உயிர்களைப்பேணும்

அன்பு வேண்டும். இவைதான் மக்கட்பண்பு. இவையில்லையெனில், அம்மகன் பிறரை வஞ்சித்து, இழித்து, புறங்கூறி, ஏமாற்றிச் சமூகத்தை அழிக்கும் முதலிடமாவான். அக் கூர்மைப் புலமையும் அதற்குத்தான் பயன்படும் என்ற உண்மைக் கருத்துக்களை உணர்த்தும் உள்ளத்துடன் "மக்கட் பண்பு" எனப் பொருள்பொதிந்த நிலையில் பொறித்துள்ளாரன்றோ! இப்பொழுது நீவிரும் ஒரு மகன் பண்பற்றுக் காணப்பட்டால் அவனை மரம் என்று கூறத்தயங்கிரன்றோ!

கலைக்கூடம் பலவற்றில் கற்றுப் பட்டம்பெற்ற நிலையில், கூர்மையான அறிவுபெற்ற தன்மையில் நிலவி, நாட்டில் இழிவான செயல்களை எடுத்தாற்றும் சில கீழ்மக்கள் உளர். அவர்கள் அக் கீழான செயல்களை எடுத்தாற்றத் துணிந்ததன் காரணம் அப் பண்பற்ற நிலைதான். இங்ஙனம் பண்பற்றுக் கீழான செயல்புரியும் அவர்கள், வையத்தில் வாழ்வாங்குவாழும் பண்புடைய மக்களுக்குப் பகைவர்களாவார். பண்பால் பகைமை கொண்ட அவர்களிடம் சில பண்புடைய மக்கள் கூடி வாழுகின்றனரே, அது நன்றுஎனின், நன்றன்று. அங்ஙனம் இழிநெறியில் இறங்கியவரின் பின்சென்று வாழ்பவரை, மனிதனுகப் பிறந்து விட்டோம், வயற்றை நிரப்பி வாழ்ந்தால்போதும், மானமும், மதிப்பும், மாண்பும் தேவையின்று. இழிந்தவன் என்று இனம் கூறினும் கூறட்டும் என்ற இழிவெண்ணத்துடன் வாழ்பவராவர் என்று ஐயமின்றிக் கூறலாம்.

பண்பற்ற அப் பகைவனுடைய இயல்புகளை எவரும் விரும்புவதின்று. பண்புடை மக்களும் அப் பகைவருடன் கூடி வாழ ஒருப்படமாட்டார்கள். கூடி வாழவும் கூடாது. அவருடன் ஒட்டாமல் வாழ்வதே உயர்வுடைத்து. ஆயின், அவருடன் ஒட்டி வாழவிழையார் எனினும் சிலபோது சேர்ந்துவாழ நேருகின்றதே அதற்கு என்செய்வது என வினவலாம். இது நல்லதொரு வினுதான். கூர்மைப் புலமை உடையவர்களின் பண்பற்றநிலையை ஒருவாறு மேல்விளக்கிப் போந்தோம். ஆண்டு அவர்கள் எங்ஙனம் பண்பற்ற நிலையை எய்தினர்களோ அதேபோன்றுதான் பண்புடை மக்களும் முற்றுப்பெற்ற மனத்திண்மையின்றி, சிறப்புற்ற சிந்தனைப் பயனின்றி, நற்பண்பின் நிலையை நலமுடனுணராது அவர்களுடன் கூடி வாழ்கின்றனர் என்று கூறல்வேண்டும்.

அப் பகைமனிதன் ஆற்றும் இழிதொழில்கள் யாவையெனின், நற்புலமைக்கு நேராகாத, பலருடைய உள்ளம் புண்படும் தகைமையில், தன் மானம் சிதைவுறும் தன்மையில், தன்

வாழ்க்கையில் மாசுபடும் முறைமையில் நிகழ்த்தப்படும் தொழில்கள் எவையெவையோ அவையனைத்தும் இழிதொழில்களாகும். இத் தொழில்களனைத்தும் பண்பற்ற மகனிடத்தில் நிகழக்காணலாம் என்று பொய்யாமொழி தன் பொன்மொழியில் காட்டுகின்றார். இங்ஙனம் இழிதொழிலாற்றும் பகைவனிடம் ஒட்டி வாழ்வபரைக் குறித்துப் பொய்யாமொழி யாது புகலுகின்றாரெனின்; பகைவருடன் கூடிவாழும் பண்புடை மக்கள் தம்முடைய மானம் குன்றி, மரியாதை சிதைந்து, தன் குழுவுக்கு இன்னல்வரும் முறையில் வாழ்வதைவிட, பகையுடன் கூடி வாழாத அந்நிலையிலேயே இறந்துபடுதல் நன்றுடைத்து என நவிலுகின்றார்.

மண்ணிற்கும், மண்ணில்வாழ் மக்களுக்கும் ஏற்றவகையில் உண்மையினை நெறிபிறழாது கூறும் தமிழற-தமிழ்ப்பண்புடைய நூல்களைத் தகவுடன் கற்றுத் தெளியாத காரணத்தாலும், கற்றாலும் அதில் தெளிவான புலமை இன்மையாலும், பிறவற்றினாலும் உயர்ந்த பண்பையும், அதன்கண் நிகழும் தொழிலையும் உணரத் தவறுகின்றனர். உயர்ந்தவரின் இயல்பை அறிய மறந்து ஒழுக்கத்திற்கு இழுக்களிக்கும் செயல் புரியத் தலைப்படுகின்றனர் சிலர்.

இழிவான தொழிலில் ஈடுபட்டுத் தன் மனம் தடுமாறுற்று மானத்தை ஒடுங்கச் செய்து, ஒழுக்கமற்ற பணியாற்றி ஒப்பற்ற உயர்வுற்ற உடையுடுத்தி ஒழுக்கத்தில் உயர்ந்தவர்கள் போன்று வேடம்தரித்து நாட்டில் வலம்வருகின்றனர் சிலர் .

பகைமைப் பண்பில் பதமுற்ற அவர்களிடம் சென்றுகூடி உதவிபெற்றுச் சில பண்புடைய மக்களும் சிலர் வாழ்கின்றனர் என்று முன் கூறினம். இவர்களனைவரையும் கண்ணுற்ற வள்ளுவத் தந்தை, வேடம்தரித்த வீணர்களையும், பகை மக்களையும் கடிந்துரைத்து, அவர்களுடன் இணைந்துவாழும் அன்பர்கள் இருக்கவேண்டிய நிலையையும் எடுத்து மொழிந்தார்.

"ஒட்டார்பின் சென்றொருவர் வாழ்தலின் அந்நிலையே
கெட்டான் எனப்படுதல் நன்று."

இது திருவள்ளுவரின் திருமொழி. இவர்தம் வாக்கின் துவக்கத்திலேயே "ஒட்டார்" எனத் துவக்குகின்றார். இங்ஙனம் துவக்கக் காரணம் யாதெனின், வள்ளுவர் ஒட்டாரைக்கண்டு உள்ளம் குமுறினார். ஒட்டாரை அவர் எள்ளளவும் ஏற்கவில்லை. ஒட்டார் இருத்தலேகூடாது என்பது வள்ளுவரின் உள்ளப் பண்பு. எனவேதான் எடுத்த எடுப்பிலேயே "ஒட்டார்" என

ஓதினர். (ஒட்டார் - பகைவர், சேராதார்) ஒட்டார் என்ற சொல்லிற்குத் தம்முடன் சேராதார் என்று பொருள்படும். தம்முடன் இரண்டறக் கலந்து இரு உள்ளமும் ஒன்றுபட்டு, வாழும் பழக்கமின்றிப் பிரிந்துசென்று வஞ்சித்துப் புறங்கூறி வாழ்பவர் யாரோ அவரைத்தான் பகைவர் என்று விளம்பினர். ஒன்றுபட்டு வாழாது வறிதே உளரிக் காலம்கழிக்கும் அம் மகனுக்கு "ஒட்டார்" என்ற பெயர் சாலவும் பொருத்தமுடைத் தல்லவா?

கூடி வாழாது ஊடிப்புறங்கூறும் பகைவர்களிடம் சென்று வாழ்பவர்கள் தமக்கு இழுக்குத் தேடிக்கொள்வதோடன்றி தன்னைச் சேர்ந்தோருக்கும் தேடிவைக்கின்றனர். தனக்கும் தன் இனத்துக்கும் ஒட்டாருடன் கூடிவாழ்தலினாலன்றோ இன்னல் ஏற்படுகின்றது. அங்ஙனமுற்ற வாழ்க்கை எற்றுக்கு? தன்னை இகழும் மகனிடம் எற்றுக்குப் போகவேண்டும்? எற்றுக்கு அம்மகனைத் தாம் கருதல்வேண்டும்? எற்றுக்கு உரையாடல்வேண்டும்? வேண்டாம்! வேண்டவே வேண்டாம்! அப்பகைவன் நட்பை நாடவே வேண்டாம்! அவனைப்பற்றி எண்ணவே வேண்டாம்! என்று தமிழ்மறை ஆசிரியர் தடை செய்கின்றனர்.

மேலும், அப்பகைவனை எண்ணாது, எண்ணி அவனை நாடி வாழாது வாழமுடியுமெனில் வாழ்க! இயலவில்லையெனில் வீழ்க! என்கின்றார். ஆயின் வீழ்க என்றுரைக்கும்பொழுது "அந்நிலையே கெட்டான்" என்று கூறுகின்றார். இதில் "அந்நிலையே" என்பது பகைவனுடன் கூடிவாழாத நிலைமையே. அவனுடன் ஒட்டாமல் வாழ இயலவில்லையெனில், அவனுடன் கூடாத அந்நிலையிலேயே இறந்துவிடுக. அதுதான் பெருமை யளிப்பது. அவனுடன் கூடிப் பின் இறந்தால் இகழப்படுமே யன்றிப் புகழப்படாது. அந்த இகழ்வுக்கு இடமின்றி இறந்து விடுக என்பதை உணர்த்தவே "அந்நிலையே" என்றார்.

ஒருவன் தன்னை முரண்பட்ட முறையில் உரையாடி, தானும் அவனுடன் ஒட்டாது, அவனையும் ஒட்டவிடாது தடுக்கும் தகைமையுடையவரின் நட்பை நாடாத நிலையில் "கெட்டான்" என்று உலகு உரைக்கும். அங்ஙனம் உரைப்பது பெறற்கரிய பெருமையை அளிப்பதாகும். இறுதியில் "கெட்டான் எனப் படுதல் நன்று" என நுவன்றுள்ளார். "நன்று" என்பதன் பொருள் விளக்கம் யாதெனின், ஒருவன் ஒட்டாரிடம் ஒண்டா மல் வாழ்ந்து தன்னுடைய மானத்தையும் மரியாதையையும் காத்தல் கடன் என்று கருதி, குடிப்பெருமை தன்னால் குன்றக்

கூடாது என்ற கோட்பாட்டிற்காக, மனிதனுக்குரிய பண்பாட்டை நிலைநிறுத்தல் வேண்டி இறந்துபட்டான் என்று கூறப்படுதல் சாலவும் மேன்மையுடைத்து என்பதை விளக்கவே, "நன்று" என வரைந்தார். இதுகாறும் விளக்கியதிலிருந்து "நீ உன்னை இகழும் அன்பர்களுடன் இணைந்து வாழாதே! அங்ஙனம் வாழ்வதைவிட, வசைச்சொற்கிடமின்றி இசைச்சொற்கிடமளித்து இறப்பதே நன்மையுடைத்து," என்பதுதான் வள்ளுவரின் முடிவான உளக்கருத்து என்பதை உணருகின்றோம்.

செந்தமிழ்ப் புலவர் செந்நாப்போதார், அரம்போன்ற கூர்மையான அறிவுபெற்ற மக்களும் மக்கட்குழுவில் கூடி வாழும் பண்பின்றி, பிரிந்துவாழ்ந்து, பிறரையும் சேரவிடாது, அவர்களைப்பற்றிப் புறங்கூறி வஞ்சித்து வாழ்பவர்களைக் கண்டு உள்ளம் நொந்து வேதனைப்பட்டார். அவர்களைத் திருத்துவான்வேண்டி அம் மக்களுக்கு மரத்தை உவமை கூறினர்! அப் பண்பற்ற மக்கள் பண்புடைய மக்களுக்குப் பகை என்பதை வெளிப்படுத்தினர்! பகையிடம் பண்புடையோர் நடக்க வேண்டிய நெறியைக் காட்டித் தன்னினத்தவர்க்கு நல்லதொரு நிலையை நவின்றுள்ளார்! பொய்யாமொழியார் பலரும் அறியும்படி முன்னிலைப்படுத்திய அம் 'மரமனிதன்' இந்நாட்டவர்க்கு மட்டுமன்று என்னாட்டவர்க்கும் பகைவனுவான்!

"அறுபகை அகற்றல்"

அளவில்லாத ஆவிகளைத் தொன்மையே பல்வேறு வகையாகப் பிணித்து அறிவை விளங்க ஒட்டாது காரறிவைச் செய்யும் மலம் பல்வேறு ஆற்றல்களையுடையது. அவ்வாற்றல் வெளிப்பட்டுப் புடைபெயரும் நிலையே ஆணவம் என்ப. ஆணவ விளைவே, ௧. செருக்கு, ௨. சினம், ௩. சிறுமை, ௪. இவறல், ௫. மாண்பிறந்தமானம், ௬. மாணு உவகை என்பன. இவற்றைக் 'காமம், வெகுளி, கடும்பற்றுள்ளம், மானம், உவகை, மதம்' எனவுங் கூறுப. இவற்றைச் செந்தமிழ்ப் பொதுமறை வருமாறு அருளுகின்றது:

"செருக்குஞ் சினமுஞ் சிறுமையும் இல்லார்
பெருக்கம் பெருமிதம் நீர்த்து."

"இவறலும் மாண்பிறந்த மானமும் மாணு
உவகையும் ஏதம் இறைக்கு." (திருக்குறள், ௪௩௧, ௨)

—இனியன்.

'புகழ்படைத்த காவலனே!'

[திரு. புலவர் அரசு]

1. தேரூரில் தோன்றிப்புத் தேரியிலே வீற்றிருந்திப்
பாரூர் புகழ்படைத்த பாவலனே!—சீரூர்ந்த
கற்றோர் உளங்கொள் கவிமணியே! நின்பிரிவால்
உற்றோம் உலையாத் துயர்.

2. ஆசிய ஜோதியால் ஆசகன்றோம் எந்துயரம்
தேசிக விநாயகனே! செப்பரிதால்—கூசிலதே
செந்தமிழ்ப் பாவின் இனிமையைத் தேக்கறியா
அந்தக் கொடுங்கூற்றந் தோ!

3. செந்தமிழ் அன்னைக்குத் தேர்ந்துநீ யாத்தணிந்த
மூந்தை மலர்மாலை மூதறிஞர்—சிந்தையிலும்
மற்றோர் உளத்தும் மணங்கமழும் நீங்காமற்
கற்றோம் களித்தோங் கனிந்து.

4. எள்ளல் இலாத கவிஞன்! எளியவர்க்கு
வள்ளல்! வசையிலா மாண்புலவன்!—உள்ளுதொறும்
தேனூறுஞ் செஞ்சொலான்! செந்தமிழ் ஞாயிறு!
வானூர்ந்தான் நம்முளத்து வாழ்ந்து!

5. செந்தமிழ்த் தேவி பிரிவால் திகைக்கின்ற
செந்தமிழ் நல்லோரே! தேர்ந்தறிமின்!—நந்தமிழ்
நாடு வளம்பெற நாமியற்றுந் தொண்டொன்றே
கூடும் மகிழவர்க்குக் கொண்டு.

சிலப்பதிகாரம் - ஆராய்ச்சி விளக்கம்

[துடிசைகிழார், அ. சிதம்பரனார்]

1. சிலம்பு

சிலப்பதிகாரம் என்னும் நூலானது தமிழ் மொழியில் உள்ள ஐம்பெருங் காப்பியங்களில் ஒன்று. காவிரிப்பூம்பட்டினத்துப் பெருங்குடி வணிகர் மரபில் வந்த கோவலன்—கண்ணகி வரலாற்றை உரைப்பது. முத்தமிழ்ப் புலமையும், வித்தகக் கவித்திறமையும் வாய்ந்த சேர அரச முனிவராகிய இளங்கோ அடிகளால் பாடப்பட்டது. படிப்பவர் நெஞ்சினை அள்ளும் பான்மைத்து. சேர—சோழ—பாண்டியர் ஆகிய முடிமன்னர் மூவரின் ஆட்சிமுறை—திறம்—அறம்—மறம் முதலியவைகளைப் பற்றியும், அக்காலக் குடிமக்களின் ஒழுக்கம், ஊக்கம், ஒப்புரவாண்மை முதலியவைகளைப் பற்றியும் கூறுவது. இயல், இசை, நாடகம் என்னும் மூன்று தமிழுக்கும் அரணாக உள்ளது.

2. காப்பியம்

காப்பியம் என்ற சொல் வடமொழியில் உள்ள காவ்யம் என்ற சொல்லின் திரிபு என்பர் சிலர். அது பொருந்தாமை காட்டுதும். காப்பியம் தமிழ்ச் சொல்லே. காப்பு + இயம் எனப் பிரித்துப் பொருள் கூறுவர். இயம் என்ற சொல் ஒலி—சொல்—வாத்தியம் எனப் பலபொருள்களைக் கொடுக்கும். ஆதி காலந்தொட்டே தமிழ்மொழி இயல்—இசை—நாடகம் எனப் பாகுபடுத்தப்பட்டு வளர்ச்சி பெற்றுவருவது கண்கூடு. உலகின் கண் வழக்கில் உள்ள எம்மொழிக்கும் இப்பாகுபாடு இல்லை. வழக்கு இறந்த மொழிகள் உள்ளும் இம்மாதிரிப் பாகுபாடுகள் இருந்ததும் இல்லை.

சிலப்பதிகாரம் என்னும் நூலைப் பார்த்தால் அது முத்தமிழுக்கும் ஓர் இலக்கியம் ஆகும் என்று யாரும் கூறுவர். அம் மூன்று தமிழ்களையும் குறிக்கும் ஒரு சொல்லைக் கொண்டுதான் அந் நூலுக்குக் காப்பியம் என்று பெயரிட்டுள்ளார்கள்.

ஆரியமொழி இத்தமிழ் நாட்டில் நுழைவதற்குப் பல ஆண்டுகள் முன்னரே, காப்பியக்குடி என்ற ஊரும், காப்பியங்களைப் பாதுகாக்கும் காப்பியர் என்ற குடிகளும் இங்கே உண்டு என்றால், அச்சொல் ஆரிய மொழியாகிய வடசொல் ஆவது எப்படி ?

கி. மு. 6000-க்கு முன்னரே சோழநாட்டில் காப்பியர்குடி என்னும் ஊர் சீகாழித் தாலூகாவில் உண்டு. (1) ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியர், (2) காப்பியக்குடித் தொல்காப்பியர், (3) வெள்ளூர்த் தொல்காப்பியர், (4) காப்பியம் சேந்தனார், (5) காப்பியாற்றுக் காப்பியனார் என்னும் புலவர் பெயர்களையும், காப்பியம்—காப்பியக்குடி—காப்பியாறு முதலிய ஊர்ப்பெயர் களையும் நோக்கினால் காப்பியம் என்பது காவ்யம் என்ற சொல் லின் திரிபு அல்ல என்றும், முத்தமிழ்களையும் பாதுகாக்கும் மக்கள் வாழும் ஊர் என்றும், முத்தமிழ்களையும் பாதுகாக்கும் குடி என்றும் பொருள் ஆவது தெளியலாம். அதுபோல் முத் தமிழ்களையும் சிதைவுறாமல் பாதுகாக்கும் நூல் காப்பியம் என்னப்பட்டது. இந்நூல் மாத்திரம் நம் கைக்கு எட்டியிரா விட்டால் விபுலானந்தர் 'யாழ் நூலை' ஆக்கியிருக்கமுடியாது.

3. இளங்கோ

இத்தகைய முத்தமிழ்களையும் பாதுகாக்கும் நூலாக அமைந்துள்ள சிலப்பதிகாரத்தை யாத்தவர் இளங்கோ அடிகள் ஆவர். அவர் இமயவரம்பன் சேரலாதனுக்கு ஞாயிற்றுச் சோழன் மகள் நற்சோணை வயிற்றில் பிறந்த இரண்டாம் குமாரர். மூத்த குமாரன் செங்குட்டுவன்.

ஒருகால் வஞ்சிமூதூர் மணிமண்டபத்தில் செங்குட்டு வனும், இளங்கோவும் தந்தையுடன் இருக்கும்போது, ஆண்டுப் போந்த நிமித்தகன் ஒருவன், இளங்கோவை நோக்கி, அவருக்கு அரசு வீற்றிருக்கும் திரு உண்டெனச் செப்ப, முன்னவனாகிய செங்குட்டுவன் இருக்க முறைமைகெடச் சொன்னான் என்று இளங்கோ கருதி, செங்குட்டுவன் மனம் நோகாதபடி குண வாயிற் கோட்டத்திலே அப்போதே துறவுபூண்டு, சிற்றின் பத்தை வெறுத்துப் பேரின்பத்தை நாடாலாயினர். குணவாயிற் கோட்டத்தில் இவர் முத்தமிழ்களையும் ஆராய்ந்து புலமை எய்தினார். சைவம், வைணவம், சைனம், பௌத்தம் முதலிய சமயங்களின் கொள்கைகளை ஆராய்ந்து தெளிந்தார். அவர் நூலிலிருந்து அவர் ஒரு பழுத்த சைவசமயத்தவர் எனக் கொள்ளக்கிடக்கிறது. அதனால் அவர் ஏனைய சமயங்களை வெறுக்காமல் அவைகளுக்கு உரிய மதிப்பைக் கொடுத்துப் பாடி இருக்கிறார். மகாமகோபாத்தியாயர் உ. வே. சாமிநாதய்யர், பண்டிதர் ந. மு. வேங்கிடசாமி நாட்டார் முதலியோருடைய கருத்துக்களும் அதுவே. இவர் சிலப்பதிகாரத்தைப் பணத்திற் காகவும், ஒருவருடைய வேண்டுகோட்காகவும், மதிப்பிற்காகவும் பாடவில்லை. அரச பதவியையே துறந்த ஒரு துறவிக்குப்

பணமும், மதிப்பும், ஒரு பொருட்டல்ல. அதனால் உண்மைக்கு மாருகவும், கற்பனையாகவும், அதிசயோக்தியாகவும் பாடவேண்டு மென்ற நோக்கம் சிறிதும் இல்லாதவர்.

4. சிலப்பதிகாரம் பாடிய காரணம்

இவர் குணவாயிற் கோட்டத்தில் தண்டமிழ்ச் சாத்தனரோடு இருந்தகாலை, குன்றக் குறவர் ஒருங்கே கூடிவந்து, செங்குன்றில் வேங்கைமர நிழலில் கண்ணகிநிற்ப, அமரர்க்கரசன் தமர் வந்து, அவள் கொழுநனைக் காட்டி, அவளுடன் விட்புலம் போயதைக்கூற, சாத்தனர் அப்போது கோவலன் வரலாற்றைக் கூற, கோவலன் கண்ணகி வரலாற்றினல் ஏற்படும் மூன்று உண்மைகளை உலகர்க்கு அறிவுறுத்த வேண்டிச் சிலப்பதிகாரம் பாடினர் என்பது,

> " அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்ருவதும்
> உரைசால் பத்தினிக்கு உயர்ந்தோர் ஏத்தலும்,
> ஊழ்வினை உருத்துவந்து ஊட்டும் என்பதும்,
> சூழ்வினைச் சிலம்பு காரண மாக
> சிலப்பதிகாரம் என்னும் பெயரால்
> நாட்டுதும் யாமோர் பாட்டுடைச் செய்யுள் "

என்ற பதிக அடிகளால் அறியலாம்.

5. சிலப்பதிகாரத்தைப் பற்றிய சில ஐயப்பாடுகள்

இத்தகைய சிறந்த உண்மை வரலாற்றில், அவ் வரலாறு நடந்த காலத்திலேயே இருந்த ஒரு சிறந்த புலவரால் பாடப் பட்ட ஒரு நூலில் சில ஐயப்பாடுகள் இப்போது கிளம்பி யுள்ளன. அவைகள் வருமாறு :

முதலாவது :—ஐம்பெருங் காப்பியங்களுள் சிலப்பதிகாரமும் ஒன்று. இன்னென்று சிந்தாமணி, சிந்தாமணியைப் பற்றி உமாபதிசிவம் என்னும் புலவர் :—

> " கலகமிடும் அமண்முரட்டுக் கையர் பொய்யே
>   கட்டிநடத் தியசிந்தா மணியை மெய்யென்று
> உலகிலுள்ளோர் சிலர்கற்று நெற்குத்துண் ணுது
>   உமிகுத்திக் கைவருந்திக் கறவை நிற்க
> மலடுகறந் துளந்தளர்ந்து குளிர்பூஞ் சோலை
>   வழியிருக்க குழியில்விழுந் தளறு பாய்ந்து
> விலைதருமென் கரும்பிருக்க இரும்பை மென்று
>   விளக்கிருக்க மின்மினித்தீய்க் காய்ந்து நொந்தார் "

என்ற பாட்டில் 'பொய்யே கட்டிநடத்திய சிந்தாமணி' என்று கூறுவதால் சிலப்பதிகாரமும் ஏனைய மணிமேகலை—குண்டலகேசி—வளையாபதி என்னும் காப்பியங்களும் பொய்யேயாகும் என்பது.

இரண்டாவது :—அதற்குச் சான்றாகச் சிலப்பதிகாரத்தில் குறிக்கப்பட்ட அரசர்கள், அதாவது, கரிகாலன், ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன், செங்குட்டுவன் முதலியோர் ஒரு காலத்தவரல்லர் என்பது.

மூன்றாவது :—கோவலன்—கண்ணகி திருமணத்தில் பார்ப்பனப் புரோகிதம், தீ வலம் வருதல், அம்மி மிதித்து அருந்ததி பார்த்தல் முதலிய பிற்காலத்துச் சடங்குகள் சிலப்பதிகாரத்தில் கூறப்பட்டிருப்பதால், இளங்கோ அடிகள் பெயரால் பிற்காலப் புலவர் ஒருவர் பாடிச் சேர்த்துவிட்டார் என்பது.

நாலாவது :—கண்ணகியின் தாயும், கோவலன் தாயும், மாதரியும் இறந்ததற்கும், கண்ணகி பிரதிட்டைக்கும் அதிக காலம் இடையீடு இன்மையால், கண்ணகியின் கல்நாட்டு விழாவின்போது, கண்ணகி தாயும்—கோவலன் தாயும்—மாதரியும் மறுபிறப்பு எடுத்து வந்து தம்முடைய முற்பிறப்பு வரலாறுகளைத் தாமே தம் வாயினுற் கூறினர் என்பது பொருத்தமாயில்லை என்பது.

ஐந்தாவது :—சிலம்பு வஞ்சினமாலையில் கூறப்பட்ட கற்புடை மாதர்கள் எழுவருடைய சரித்திரங்களும் நம்பத்தகுந்தவை அல்ல; இளங்கோ அடிகள் அத்தகைய கதைகளைத் தம்முடைய காப்பியத்தில் வைத்துப்பாடி இருக்கமாட்டார் என்பது.

ஆறாவது :—ஒரு பொற்கொல்லன் குற்றம் செய்ததற்காக குற்றம்செய்யாத ஆயிரம் பொற்கொல்லரை வெற்றிவேற்செழியன் கண்ணகிக்குப் பலி கொடுத்ததாகச் சிலப்பதிகாரத்தில் கூறப்பட்டுள்ளது நியாயமல்லாதது. இளங்கோ அடிகள் அந்தமாதிரிப் பாடி இருப்பாரா என்பது ஐயம் என்பது.

ஏழாவது :—சிலம்பு வஞ்சின மாலையில் :—

" இடமுலை கையால் திருகி மதுரை
வலமுறை மும்முறை வாரா அலமந்து
மட்டார் மறுகின் மணிமுலையை வட்டித்த
விட்டாள் எறிந்தாள்......................
....
பொற்றொடி ஏவப் புகையழல் மண்டிற்றே
நற்றேரான் கூடல் நகர் "

என்ற அடிகளின்படி கண்ணகி தனது இடமுலையைக் கையால் திருகி எடுத்து மதுரையை மும்முறை வலம்வந்து, வட்டித்து எறிந்து, மதுரை மாநகரை எரிமூட்டியதாகக் கூறப் பட்டுள்ளது, அறிவுக்குப் பொருந்துவதாயில்லை. இளங்கோ அடிகள் அம்மாதிரிப் பாடி இருக்கமாட்டார் என்பது.

6. ஐயப்பாடுகளின் ஆராய்ச்சி

முதலாவது சிந்தாமணிபோல சிலம்பு ஒரு கற்பனை என்பது

ஐம்பெருங் காப்பியங்களில் சிந்தாமணி—சிலப்பதிகாரம்—மணிமேகலை மூன்றும் நம் கைக்கு எட்டி இருக்கின்றன. ஏனைய குண்டலகேசி—வளையாபதி கிடைக்கவில்லை. ஆகையால், கடைசி இரண்டு நூல்களைப்பற்றிப் பேசுவதற்கு இல்லை. முதல்மூன்று நூல்களில் முதலாவது சிந்தாமணியானது கற்பனையாகச் செய்யப்பட்டது, உண்மையாக நடந்த வரலாறு அல்ல என்பதை புலவர் உமாபதிசிவம் கூறுகிறார். நாம் அதனை ஒப்புக்கொள்ளு வோம். அதனாலேயே ஏனைய சிலப்பதிகாரமும் மணிமேகலையும் கற்பனையாக இருக்கவேண்டும் என்பதில்லை. உண்மையாக நடந்த, கோவலன்—கண்ணகி வரலாற்றை, உண்மையாக அதே காலத்தில் வாழ்ந்திருந்த ஒரு சேரமுனிவர் இளங்கோவால், உலகர்க்கு மூன்று உண்மைகளை உணர்த்தும் பொருட்டுப் பாடப்பட்ட ஒரு நூலைப் பொய்க்கதை என்று கூறுவார் மதி இருந்தவாறு என்னே! அதேமாதிரி, கோவலன் மகள் மணி மேகலையின் வரலாற்றை, இளங்கோ அடிகளின்உடன் இருந்த கடைச்சங்கப் புலவர் சீத்தலைச்சாத்தனார் நடந்தது நடந்தபடியே பாடியுள்ளார். ஆதலின், சிலப்பதிகாரமும் மணிமேகலையும் கற்பனைக் கதைகள் அல்ல. நடந்த வரலாறுகளே; அவ்வரலாறு களில் உள்ள உண்மைகளை மக்களுக்கு உணர்த்தவே அவ்வர லாறுகள் காப்பியங்களாகச் செய்யப்பட்டன.

சேரர் தலைநகராகிய வஞ்சிமூதூரைச் சேர்ந்த குணவாயிற் கோட்டத்தில், தவம் இயற்றிக்கொண்டிருந்த இளங்கோ அடிக ளிடம், அந்நாட்டுக் குன்றக் குறவர் போந்து, நெடுவேள் குன்றில் வேங்கைமர நீழலில் நின்ற கண்ணகிக்கு வானவர் வந்து கோவலனைக் காண்பித்து, அவளை வானுலகிற்கு அழைத்துச் சென்ற புதுமையைத் தாம் நேரிற்கண்டதாகக் கூற, அப்போது அங்கே அடிகளிடம் இருந்த மதுரைத் தமிழ்ச் சங்கப் புலவர் கூலவாணிகன் சீத்தலைச்சாத்தனார் "**யானறிகுவன் அதுபட்டது**" எனக்கூறி, கோவலன் கண்ணகி வரலாற்றைக் கூறினார். புகாரிலும் மதுரையிலும் நடந்தவற்றை அது தெரிந்த சாத்தனார்கூற, பிறகு வஞ்சியில் நடந்தவற்றை நேரில்கண்ட

இளங்கோ அடிகள் நூலாகப் பாடினர். அப்படி இருக்க அது பொய்க்கதை ஆவது எப்படி?

மேலும், செங்குட்டுவன் வஞ்சியில் கண்ணகிக்குக் கோயில் எடுத்ததுபோல, வெற்றிவேற் செழியன் மதுரையில் கண்ணகிக்குக் கோயில் அமைத்து திருவிழாச் செய்ததும், கொங்கு இளங்கோசர் கொங்கில் கண்ணகிக்குக் கோவில் அமைத்துத் திருவிழாச் செய்ததும், இன்னும் இலங்கைக் கயவாகுவும், உறந்தைச் சோழன் இராசசூயம் வேட்டபெருநற் கிள்ளியும், ஆரிய அரசர்களும், மாளுவ வேந்தரும் கண்ணகிக்குக் கோயில் அமைத்து வழிபட்டதை உரைபெறு கட்டுரையாலும், வரந்தருகாதையாலும், அந்தந்த நாட்டுச் சரிதங்களாலும் அறிகின்றோம்.

இவைகளை எல்லாம் நோக்காது, சிலப்பதிகாரம் கற்பனை என்று கூறுவது பொருந்தாது. கற்பனையாக இருந்தால், பல நாட்டாரும் அதனை ஆதரிக்கமாட்டார்கள். உண்மைச் சரிதமாக இருந்ததினல்தான் எல்லோரும் கண்ணகியை வழிபட்டார்கள். அக் கோவில்கள் இன்றும் நிலைபெற்று நம்பாதவர்களுக்கு நம்பிக்கையை ஊட்டி வருகின்றன. உலகத்தார்க்கு நீதிகளைப் போதிக்க அறிஞர்கள் காப்பியங்களை வகுக்கும் போது கற்பனைக் கதைகள் மூலமாகவும், நடந்த சரித்திரங்கள் மூலமாகவும் போதிப்பார்கள். சிந்தாமணியைக் கற்பனைக் கதையாகவும், சிலப்பதிகாரம்—மணிமேகலையை நடந்த சரித்திரங்களாகவும் கொள்ள வேண்டும். உண்மையும் அதுவே.

7. இரண்டாவது சிலப்பதிகாரத்தில் வரும் அரசர்கள் ஒரு காலத்தவர் அல்ல என்பது

இத்துடன் இணைக்கப்பட்டிருக்கும் சேர—சோழ—பாண்டிய மன்னர்களின் குடிவழிப் பட்டியைப் பார்க்க.

கோவலன்—கண்ணகி காலத்தில் புகாரில் அரசாண்டவன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் (கி. பி. 100—145) ஆவான். அவன் இரண்டாம் கரிகாலனுக்கு (கி. மு. 50 கி. பி. 37) மகன் வயிற்றுப் பேரன் ஆவன். மதுரையில் அரசாண்டவன் ஆரியப்படைகடந்த நெடுஞ்செழியன் II (கி. பி. 119—145) என்பவன் ஆவான். இவன்தான் கோவலனைக் கொலை செய்தவன். வஞ்சியில் அரசாண்டவன் செங்குட்டுவன் (கி. பி. 100—155) ஆவான்.

இளங்கோ அடிகள் கோவலன் காலத்தில் கரிகாலன் அரசாண்டதாகச் சிலப்பதிகாரத்தில் எந்த இடத்திலும் கூறவில்லை.

அப்படி இருக்கத் தற்காலம் சிலருக்கு ஐயம் ஏற்படுவானேன் என்றால் கூறுதும். அரங்கேற்றுக் காதையில்,

"சூழ்கழன் மன்னருக்குக் காட்டல் வேண்டி"

என்ற அடிக்கு, அரும்பத உரையாசிரியரும், அடியார்க்கு நல்லாரும் **சூழ்கழன் மன்னன்** என்பதற்குக் **கரிகாற் பெருவளத்தான்** என்ற பொருள் உரைத்துள்ளார். இளங்கோ அடிகள் கரிகாலன் என்ற பெயர் குறியாது, **மன்னன்** என்று பொதுவாகக் கூறியுள்ளமையானும், "**செரு வெங்காதலின் திருமாவளவன்........ புண்ணியத் திசைமுகம் போகிய அந்நாள்**" என்று இந்திர விழவூர் எடுத்த காதையில் **கரிகால்வளவனைப்பற்றி இறந்த காலத்தில்** கூறியுள்ளமையானும் இளங்கோ அடிகட்கு அது கருத்து அன்று என்று கொள்க

ஒவ்வொரு காண்டத்து இறுதியிலும் அந்தந்த நாட்டு அரசர்களின் பெயர்களைக் கூறியுள்ளார். அவை வருமாறு :

புகார்க்காண்டம் (கட்டுரை)

"முடியுடை வேந்தர் மூவருள்ளும்
தொடிவிளங்கு தடக்கைச் சோழர் குலத் துதித்தோர்"

மதுரைக் காண்டம் (கட்டுரை)

"முடிகெழு வேந்தர் மூவருள்ளும்
படை விளங்கு தடக்கைப் பாண்டியர் குலத்தோர்
....
வடவாரியர் படை கடந்து
தென் தமிழ் நாடு ஒருங்கு காணப்
புரை தீர் கற்பின் தேவி தன்னுடன்
அரசுக் கட்டிலில் துஞ்சிய **பாண்டியன்**
நெடுஞ்செழிய னோடு ஒரு பரிசா

வஞ்சிக்காண்டம் (கட்டுரை)

"முடியுடை வேந்தர் மூவருள்ளும்
குடதிசையாளும் கொற்றங் குன்றா
ஆர மார்பிற் சேரர் குலத்துதித் தோர்
....
பொங்கிரும் பரப்பிற் **கடல் பிறக் கோட்டிய**
கங்கைப் பேரியாற்றுக் கரை போகிய
செங்குட்டுவ னோடு ஒரு பரிசா

மதுரைக் காண்டத்து இறுதியில் பாண்டியன் நெடுஞ்செழியனையும், வஞ்சிக் காண்டது இறுதியில் சேரன் செங்குட்டுவனையும்

கூறிய இளங்கோ அடிகள் புகார்க் காண்டத்து இறுதியில் சோழ அரசனைப் பெயர் குறித்துக் கூறுதது நோக்கத்தக்கது. ஆதலால், கரிகால் வளவன் என்ற உரையாசிரியர் கூற்றை நம்பி ஒரு முடிபுக்கு வர முடியாது என்று அறியவும். உரையாசிரியர்கள் காலத்தில் சரித்திர ஆராய்ச்சி இன்மையின், அவர்கள் காலத்தை நோக்காமல் சரிதப் போக்கையே கொண்டு உரையெழுதினவர்கள் ஆவார்கள். ஆதலின், சிலப்பதிகாரத்தில் சரித்திர முரணாக இளங்கோ அடிகள் எங்கும் கூறவில்லை என்பது அறியத்தக்கது.

8. மூன்றாவது பார்ப்பனப் புரோகிதம் முதலிய பிற்காலத்தது என்பது

மங்கல வாழ்த்துப் பாடலில் (49—53)

"நீல விதானத்து நித்திலப் பூம் பந்தர்க் கீழ்
வான்ஊர் மதியம் சகடணைய வானத்துச்
சாலி ஒருமீன் தகையாளைக் கோவலன்
மாமுது பார்ப்பான் மறைவழி காட்டிடத்
தீவலம் செய்வது காண் பார்கள் நோன் பென்னை"

என்று கூறப்பட்ட அடிகளைக்கொண்டுதான் இந்த ஐயம் எழுந்தது.

சங்க காலத்தில் பார்ப்பனப் புரோகிதம் இல்லை; பிற்காலத்தில் தான் ஏற்பட்டது என்று நினைப்பதால் வந்த தவறு இது. கி. மு. 7500-ல் பாண்டிய நாட்டில் அரசாண்ட பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி காலத்திலேயே ஆரியர்கள் தமிழ் நாட்டில் குடியேற ஆரம்பித்து விட்டார்கள். வேள்விக்குடிச் சாசனம் இதனை உறுதிப்படுத்துகிறது.

சாசன அடிகள்

"...................வேள்விக்குடி என்ற பதியை
சீரோடு திருவளரச் செய்தார் வேந்தன் அப்பொழுதே
நீரோடு அட்டிக் கொடுத்தமையால் நீடுபுத்தி துய்த்தபின்"

ஆதலின், பாண்டியன் முதுகுடுமிப் பெருவழுதி காலம் முதல், மூன்றும் நிலந்தரு திருவிற் பாண்டியன் (6000கி. மு.) காலத்திலும், அவனுக்குப் பின்னும், கடைச் சங்க காலத்திலும் பார்ப்பனப் புரோகிதமே நடைபெற்றதாகச் சங்க நூல்களிலிருந்து அறியக் கிடக்கின்றது. அரசர்களே அப்படி இருக்க, ஏனைய மக்கள் அவர்களைப் பின்பற்றுவது ஓர் வியப்பாகாது.

மறைவுற்ற தமிழ் நூல்கள்

[மயிலை. திரு. சீனி, வேங்கடசாமி]

(சிலம்பு : உக, பரல் : ௩, ககஉ-ஆம் பக்கத் தொடர்ச்சி)

104. செய்யுளியல்

செய்யுளியல் என்னும் பெயருள்ள நூல் ஒன்று இருந்த தென்பது யாப்பருங்கல விருத்தியுரையினாலும், யாப்பருங்கலக் காரிகைக்குக் குணசாகரர் எழுதிய உரையினாலும் தெரிகிறது. இவ்வுரையாசிரியர்கள், செய்யுளியல் ஆசிரியரின் பெயரைக் கூறாமல், செய்யுளியலுடையார் என்று கூறுகின்றனர். இவ் வுரையாசிரியர்கள் கூறுவன வருமாறு :—

"நேர்க்கீழ்க் குற்றியலுகரம் வரினும் முற்றியலுகரம் வரினும் நேர்பசையாம். நிரையசைக்கீழ்க் குற்றியலுகரம் வரினும் முற்றியலுகரம் வரினும் நிரைபசையாம் என்றார் செய்யுளியலுடையார்." (யாப்பருங்கலம். தளையோத்து. விருத்தி யுரை.)

"'சொற்சீர்' என்பது,
கட்டுரை வகையா னெண்ணொடு புணர்ந்து
முட்டடியின்றிக் குறைவுசீர்த் தாகியு
மொழியிசை யாகியும் வழியசை புணர்ந்தும்
சொற்சீர்த் திறுதல் சொற்சீர்க் கியல்பே.

என்று செய்யுளியலுடையார் ஓதிய பெற்றியால் வருவனவெனக் கொள்க." (யாப்பருங்கல விருத்தி. அடியோத்து.)

"ஒருசாராசிரியர் இரண்டாமெழுத்தின் மேலேறிய யுயிரொன்றி வந்தாலு மூன்றாமெழுத்து ஒன்றிவந்தாலும் எதுகைப்பாற் படுத்து வழங்குவர். வரலாறு :—

துளியொடு மயங்கிய தூங்கிரு ணடுநா
ளணிகிளர் தாரோ யருஞ்சுர நீந்தி
வடிமை யெஃகம் வலவயி னேந்தித்
தனியே வருதி நீயெனின்
மையிருங் கூந்த லுய்தலோ வரிதே.

இஃதிரண்டாமெழுத்தின் மேலேறிய உயிரொன்றிய வெதுகை. இது செய்யுளியலுடையார் காட்டியது." (யாப்பருங்கல விருத்தி, தொடையோத்து.)

"வெண்கூ வெண்பா வென்பது நேரசை வெண்பாவென வெழுத்து மிக்கிசைப்பது. அஃது ஆசுகவிகள் கூறுமாற்றாற் கூறப்பிறப்பது. என்னை? 'வெண்கூ வெண்பா வெழுத்திறந் திசைக்கும்.' என்றாராகலின்.

வரலாறு :—

தண்டடைந்த திண்டோளாய் தாங்கலாந் தன்மைத்தோ
கண்டடையார் தம்மைக் கனற்றுமா—வண்டடைந்த
நாணீல நாறுந்தார் நன்னன் கலைவாய
வாணீலக் கண்ணார் வடிவு.

எனவும்,

அறந்தருதண் செங்கோலை யன்ன மடந்தை
சிறந்தன சேவலோ டீ—மறந்தொருகா
றன்ன மகன்றாலுந் தன்னுயிர் வாழாவா
லன்ன மகன்றி லிவை.

எனவும் இவை வெண்கூ வெண்பாவென்று செய்யுளியலுடையார் காட்டிய பாட்டு. (யாப்பருங்கல விருத்தி. செய்யுளியல் 4.)

மனைக்குப் பாழ் வாணுத லின்மைதான் சென்ற
திசைக்குப்பாழ் நட்டோரை யின்மை. இருந்த
அவைக்குப்பாழ் மூத்தோரை யின்மை. தனக்குப்பாழ்
கற்றறி வில்லா வுடம்பு.

இஃது அகவல் வெண்பாவென்று செய்யுளியலுடையார் காட்டிய பாட்டு. (யாப்பருங்கல விருத்தி. செய்யுளியல் 4.)

"'மஞ்சுசூழ் சோலை மலைநாட மூத்தாலும்
அஞ்சொன் மடவார்க் கருளு.'

இது பிறப்பென்னும் வாய்பாட்டான் முற்றியலுகர மீறாக இற்ற வெண்பா.

'இனமலர்க் கோதா யிலங்குநீர்ச் சேர்ப்பன்
புனைமலர்த் தாரகலம் புல்லு.'

இது காசென்னும வாய்பாட்டான் முற்றியலுகர மீறாக இற்ற வெண்பா.

இவை செய்யுளியலுடையார் காட்டிய வெண்பாவெனக் கொள்க" (யாப்பருங்கலக் காரிகை 25. குணசாகரர் உரை.)

செய்யுளியலுடையார் நாற்சீரடி தன்னையே நாலெழுத்து முதலா ஆறெழுததின் காறும் உயர்ந்த மூன்றடியும் குறளடி

என்றும், ஏழெழுத்து முதலா ஒன்பதெழுத்தின் காறும் உயர்ந்த மூன்றடியும் சிந்தடி என்றும், பத்தெழுத்து முதலாப் பதினான்கெழுத்தின் காறும் உயர்ந்த ஐந்தடியும் அளவடி என்றும், பதினைந்து முதலாப் பதினேழெழுத்தின் காறும் உயர்ந்த மூன்றடியும் நெடிலடி என்றும் பதினெட்டெழுத்து முதலாக இருபதெழுத்தின் காறும் உயர்ந்த மூன்றடியும் கழிநெடிலடி என்றும் வேண்டுவர்."

(யாப்பருங்கலக் காரிகை. 43. குணசாகரர் உரை.)

105. சங்கயாப்பு

சங்கயாப்பு என்னும் பெயருள்ள யாப்பிலக்கண நூல் ஒன்று இருந்ததென்பது, யாப்பருங்கல விருத்தியுரையினால் தெரிகிறது. யாப்பருங்கல (அடியோத்து 28-ஆவது சூத்திரம்) விருத்தியுரையாசிரியர், பாவினங்களுக்குச் சில செய்யுள்களை உதாரணங்காட்டி, **பிறவும் சங்கயாப்பிற் கண்டுகொள்க** என்று எழுதுகிறார். சங்கயாப்பு என்னும் பெயருள்ள இந்நூலை யார் இயற்றினார், எந்தக்காலத்தில் இயற்றப்பட்டது என்பன தெரியவில்லை. இந்நூல் சூத்திரங்கள் சிலவற்றை, யாப்பருங்கல விருத்தியுரைகாரர் மேற்கோள் காட்டுகிறார். அவை வருமாறு:—

அகர முதலா ஔகார மீறா
யிசையொடு புணர்ந்தவீ ராறு முயிரே. 1

ககர முதலா னகர மீறா
விவையீ ரொன்பது மெய்யென மொழிப. 2

குறிலோ ரைந்து மறிவுறக் கிளப்பின்
அ இ உ எ ஒவென்னு மிவையே. 3

ஆ ஈ ஊ ஏ ஐ ஓ ஔவெனும்
ஏழு நெட்டெழுத் தென்ற லியல்பே. 4

கண்ணிமை கைநொடி யென்றிவை யிரண்டு
மின்னடை யளவே யெழுத்தின் மாத்திரை. 5

வன்மை யென்ப கசட தபற. 6

மென்மை யென்ப ஙஞண நமன. 7

இடைமை யென்ப யரல வழள. 8

அவைதாம்,
புள்ளியொடு நிற்ற லியல்பென மொழிப
புள்ளியில் காலை யுயிர்மெய் யாகும். 9

அரைநொடி யளவின வறுமூ உடம்பே. 10

அரைநொடி யென்ப தியாதென மொழியின்
நொடிதரக் கூடிய விருவிர லிசையே. 11

குற்றிய லிகரமுங் குற்றிய லுகரமு
மற்றவை தாமே புள்ளி பெறுமே. 12

நேர்நால் வகையு நெறியுறக் கிளப்பின்
நெடிலுங் குறிலுந் தனியே நிற்றலும்
அவற்றின் முன்ன ரொற்றொடு நிற்றலும்
இவைதா நேரசைக் கெழுத்தி னியல்பே. 13

இணைக்குறில் குறினெடி லிணைந்து மொற்றடுத்தும்
நிலைக்குரி மரபி னிரையசைக் கெழுத்தே. 14

"அகவ லென்ப தாசிரியப் பெயரே." 15

"அகவ லென்ப தாசிரியப் பாவே." 16

ஏழடி யிறுதி யீரடி முதலா
வேறிய வெள்ளைக் கியைந்தன வடியே
மிக்கடி வருவது செய்யுள்கட் குரித்தே
மூவடிச் சிறுமை யாயிர மாகு
மாசிரி யத்தின் பெருமை யளவே. 17

என்றார் சங்கயாப்புடையார். (அடியோத்து 32. உரை மேற்கோள்.)

முந்திய மோனை யெதுகை யளபெடை
யந்தமின் முரணே செந்தொடை யியைபே
பொழிப்பே யொரூஉவே யிரட்டை யென்று
மியற்படு தொடைக ளிவைமுத லாகப்
பதின்மூ வாயிரத் தறுநூ றன்றியுந்
தொண்ணூற் றொன்பதென் றெண்ணினர் புலவர். 18

வல்லொற்றுத் தொடர்ச்சியு மெல்லொற்றுத் தொடர்ச்சியு
மிடையொற்றுத் தொடர்ச்சியு முறைபிறழ்ந் தியலும். 19

ஏந்திசைச் செப்பலுந் தூங்கிசைச் செப்பலு
மொழுகிசைச் செப்பலு முண்ணும் வெண்பா
செப்ப லோசை வெண்பா வாகும். 20

வெண்சீர் வெண்டளை யான்வரும் யாப்பை
யேந்திசைச் செப்ப லென்மனார் புலவர். 21

இயற்சீர் வெண்டளை யான்வரும் யாப்பைத்
தூங்கிசைச் செப்ப லென்மனார் புலவர். 22

வெண்சீ ரொன்றலு மியற்சீர் விகற்பமும்
ஒன்றிய பாட்டே யொழுகிசைச் செப்பல். 23

கொச்சகம் வெண்கலி யொத்தா ழிசையென
முத்திற மாகுங் கலியின் பகுதி. 24

106. விம்பசார கதை

இப் பெயர்கொண்ட ஒரு நூல் இருந்ததென்பது, நீலகேசி என்னும் சமண சமய நூலுக்குச் சமய திவாகர வாமன முனிவர் எழுதிய உரையில் இருந்தும், சிவஞானசித்தியார் என்னும் சைவ சமய நூலுக்கு ஞானப்பிரகாசர் எழுதிய உரையில் இருந்தும் தெரிகிறது. நீலகேசியில் குண்டலகேசி வாதச் சருக்கத்தில் 41-ஆவது செய்யுள் உரையில் உரையாசிரியர் வாமன முனிவர் இவ்வாறு கூறுகிறார்.

"இவன் (புத்தர்) பிறக்கின்ற காலத்து மாதாவினது வல மருங்குலாற் பிறந்தான்; அவளும் ஆறுநாட் குற்றுயிரோடு கிடந்து ஏழாநாளிறந்தாள். இது புத்த மாதாக்கள் யாவர்க்கு மொக்கும். என்னை?

'உலும்பினி வனத்து ளொண்குழைத் தேவி
வலம்படு மருங்குல் வடுநோ யாறும
லான்றே னவ்வழித் தோன்றின னுதலி
னீன்றே ளேழாநா ளின்னுயிர் வைத்தாள்.'

என்பது பிம்பசார கதை யென்னுங் காவியம்; பௌத்தருடையது. அதன்கட் கண்டுகொள்க."

சிவஞான சித்தியார் பரபக்ஷம், சௌத்திராந்திகன் மத மறுதலை 5-ஆவது செய்யுளுரையில் உரையாசிரியர் ஞானப்பிர காசர் கூறுவது வருமாறு:—

"புத்தன் பிறக்கிற காலத்து மாத'வினுடைய வலமருங்கு லாற் பிறந்தான்; அவளு மாறுநாள் குற்றுயிரோடே கிடந் தேழாநாளிறந்தாள். இது புத்த மாதாக்களிருபத்து நால் வர்க்குமொக்கும். இதற்கு உதாரணம்,

'உலும்பினி வனத்து ளொண்குழைத் தேவி
வலம்படு மருங்குல் வடுநோ யுறும
லான்றே னவ்வழித் தோன்றின னுதலி
னீன்றே ளேழாநா ளின்னுயிர் வைத்தாள்.'

இது விம்பசார கதை யென்னுங் காவியம்; பௌத்தருடைய நூல், அதன்கட் கண்டுகொள்க."

இவ்விரண்டு உரையாசிரியர்கள் கூறுவதிலிருந்து, விம்ப சார கதை அல்லது பிம்பசார கதை என்னும் பெயருள்ள பௌத்த மத காவியம் ஒன்று இருந்ததென்பது தெரிகிறது. இதைப்பற்றி வேறு செய்திகள் ஒன்றும் தெரியவில்லை. இந் நூலாசிரியர் யார், அவர் இருந்த காலம் எது என்பனவும் தெரியவில்லை.

பிம்பசாரன் என்னும் அரசன் புத்தர் உயிர்வாழ்ந்திருந்த காலத்தில் மகததேசத்தை அரசாண்டுவந்தான். புத்தரிடம் நட்புக்கொண்டு அவருக்குச் சீடனாக இருந்ததோடு புத்தருக்கும் பௌத்தமதத்துக்கும் பல தான தருமங்களைச் செய்தான். இந்த அரசன் புத்தருடைய வாழ்க்கை வரலாற்றில் பலவகையிலும் தொடர்புடையவன். தன் மகன் அஜாதசத்துரு என்பவனால் இவன் சிறையிலிடப்பட்டு உயிர்நீத்தான். பௌத்தர்களினாலே இவன் பெரிதும் போற்றப்படுகிறவன் ஆவன். பிம்பசார காவியம் இவன் வரலாற்றைப் பொருளாகக்கொண்டு எழுதப்பட்டதுபோலும். மணிமேகலை என்னும் பௌத்த காவியத்தைப்போலவே இந்தக் காவியமும் ஆசிரியப்பாவினால் இயற்றப்பட்டது போலும்.

நடுநிலை

(நாஞ்சில், திரு. கா கணபதி)

நாயொன்று மூலையினில் என்பெலாங்
 கட்டுவிட்டு உடல்தளர்ந்து
தீயொன்று மெழுகெனவே துடித்திடவும்
 மருங்கே கிடந்த ஏழை,
பாயொன்று மெத்தையினில் படுத்தவனும்
 முன்னாள் ஆனால் இன்று
சீயென்று உமிழ்நிலையில் என்புநக
 மண்ணதனில் கிடந்தானங்கே ! (1)

காந்தச் சுடரொடிடு காட்டினிலே
 எரியூட்டும் தீயே உன்முன்
வேந்தனிலை செல்வனிலை ஏழையிலை
 பணமுமிலை அழகொன் றில்லை
பாந்தமிலை, பகையில்லை, செருக்கில்லை
 சாதியிலை யென்னே நின்போல்
மாந்தரிலே சமநோக்குக் கொண்டவரை
 மாநிலத்தில் கண்டே னில்லை ! (2)

தினையும் பனையும்

[திரு. கரு. நாகரத்தினம், கணியூர்]

யாருக்காவது ஓர் உதவியைச் செய்தால் இறுதியில் அவர், "இவ்வேளையில் நீசெய்த உதவிக்கு இவ்வுலகமும் ஒப்பு ஆகுமோ?" என்று கூறுகின்றார். இஃது உலக வழக்கு. ஆனால், திருவள்ளுவரோ உலகியல் அறிவோடு உயர்குணம் இனையவும் அமைந்த அறிஞராக விளங்குகின்றார்.

"காலத்தி னாற்செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது"

என்று காலத்தை நோக்க அவ்வுதவி இஞ்ஞாலத்தை விடப் பெரியது என்று கூறுகின்றார். செய்யாமல் செய்த உதவிக்கு இவ்வையகத்தையே யன்றி வானகத்தையும் சேர்த்துக் கைம் மாறாகக் கொடுத்தாலும் ஈடாகாதென்றும், பயன் கிட்டும் என்ற கருத்திலராய்ச் செய்த உதவியாகிய ஈரமுடைமையை நயன்தூக்கின் அதன் நன்மை கடலினும் பெரியது என்று மேன்மேலும் கூறிச்சென்று இறுதியில் 'நன்றிமறந்தவனுக்கு உய்வு இல்லை' என அடுக்கிச் செல்கின்றார்.

ஒருநாள் திருவள்ளுவர் ஒரு காட்டின் வழியே நடந்து சென்று கொண்டிருந்தார். கடும்பசிக்கிடையே பரிதியின் பகலாட்சி வேறு! நிழல்தரும் மரங்கள் எதிரில் எதுவும் தென்படவில்லை. ஆனால், பாதையின் இருமருங்கிலும் பசுமையுடன் காட்சி யளிக்கும் தினைப்புனத்தைக் கண்டார். குளிர் காற்று ஒருவாறு அவர் உடலுக்கும், உள்ளத்திற்கும் வளப்பம் தந்தது. திடீரென்று 'படபட' என்னும் ஒலி காற்றில் மிதந்து வருவதைக் கேட்டார். கறுத்து, உயர்ந்த பனைமரங்களின் ஓலைகளின் ஒலி தாம் என்று கண்டார். பனையோலை யொன்று காற்றினால் தினைப்புனத்தில் வீழ்ந்தது. திருவள்ளுவர் அதையெடுத்து நறுக்கி ஏட்டின் வடிவாக்கினார். தினையையும் பனையையும் மாறிமாறிக் கீழேயும் மேலேயும் சிறிதுநேரம் உற்று நோக்கினார். ஒப்புமை காட்டும் அளவைகட்கு இவை இரண்டும் உகந்தது என்று எண்ணினார். பனைமர நிழலிலேயே உட்கார்ந்து ஏட்டில் எழுதினார்.

"தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்
கொள்வர் பயன்தெறி வார்"

என்று உதவி செய்தவர்களான் வரும் பயனைக் கருதுவார்க்கு அறம் கூறினர். தினையும் பனையுமல்லவா திருவள்ளுவருக்கு உதவி செய்தன.

அடுத்துப் பொருளுக்கு வந்தார். முன்பு கூறியதற்கு மறுதலையாக அமைந்தது போல,

"தினைத்துணையாங் குற்றம் வரினும் பனைத்துணையாக்
கொள்வர் பழி நாணுவார்"

என்று 'பழிநாணுவார் குற்றம் வராமல் காத்துக்கொள்க' என்பதை வலியுறுத்துவது போன்று கூறினர். பிறகு, இன்பத்திற்கு வந்தார்; காதலர்களில் மகளிர் அவர் கண்முன் நின்றனர்.

"தினைத்துணையு மூடாமை வேண்டும் பனைத்துணையும்
காம நிறைய வரின்"

என்று மகளிர் காமம் மிகுந்துழிச் சிறிதும் ஊடுதல் செய்யாமை வேண்டும் என்று கூறினர். இசசிறப்புக் கண்டபின்னர் தானே கபிலரும் பின்வரும் வெண்பாவினைப் பாடினர்.

"தினையளவு போதாச் சிறுபுன்னீர் நீண்ட
பனையளவு காட்டும் படித்தான்—மனையளகு
வள்ளைக் குறங்கும் வளநாட வள்ளுவனர்
வெள்ளைக் குறட்பா விரி."

உலகத்து இயற்கை

[நெல்லை க. சுப்பிரமணியன், சென்னிமலை]

அறுசீர் விருத்தம்

திரண்டபெருஞ் செல்வத்தைத் தேடுதற்கும்
செழிப்போடு வாழ்வ தற்கும்
இரவுபகல் உழைக்கின்ருர், ஒருசாரார்;
இன்னுமொரு சாரார் தங்கள்
கரவில்லாக் குறிக்கோளைக் கனவினுள்ளும்
கருதிக்கொண் டுழுற்று கின்ருர்;
இரண்டுவெட்ட இயற்கையினுல் இவ்வுலகம்
இயங்கிவரும் நிலைமை காண்மின்!

*திருக்குறள் தண்டபாணி விருத்தியுரை

௨. பொருட்பால்

௧. அரசியல்

பொருள் செயல் மக்களாதலானும், அம்மக்கள் பலர்கூடித் தம்மில் ஒருவனைத் தலைவனாகக் கொண்டொழுகலும் முன்னர் கூறப்பட்டன. அத்தலைவனே இறையெனவும் வேந்து எனவும் அரசு எனவும் இவ்வாறெல்லாம் கூறப்படுவன். இறை முதலாய இவையெல்லாம் அப்பண்புணர்த்தி நிற்குஞ் சொற்களேயாயினும், சொல்லப்படும் குறிப்பால், அப்பண்பையே உணர்த்தி அஃறிணையாய் நில்லாது அப்பண்பையும் அப்பண்பை உடையானையும் ஒருங்குணர்த்தி உயர்திணை மருங்கின் நிலையினவாம். ஆயினும் அஃறிணை மருங்கிற் கிளந்தாங் கியலும். இதனைக் 'குடிமையாண்மை' யெனவரும் தொல்காப்பியக் கிளவியாக்கம் ௫௭-ம் சூத்திரத்தாலறிக. இவை அஃறிணை முடிபு கொள்ளு தலேயன்றி நின்றாங்கிசைத்து உயர்திணை முடிபு கொள்ளுதலும் (கிளவியாக்கம், ௫௬), ஈறு திரிந்து இறைவன் வேந்தன் அரசன் என இவ்வாறு உயர்திணை மருங்கிற் பால் பிரிந்திசைத்து (பெயரியல், ௧௧) உயர்திணை முடிபிற்குரியவாதலும் உண்டு. இது கிடக்க. ஈண்டு அரசியல் என்றது அரசனது இயல்பு கூறும் பகுதியென்றவாறு. அவ் வியல்பினை இறைமாட்சி முதல் இடுக்கணழியாமை யீறாக இருபத்தைந் ததிகாரங்களான் முறைப்படுத்திக் கூறுவான் வைத்த ஆசிரியர் முதற்கண் இறைமாட்சி கூறுகின்றார்.

அதிகாரம் - ௩௯

இறைமாட்சி

அஃதாவது, அரசனது சிறப்பு. உலகம், கட்புலன்காணு இறைவன் வழித்தாமாறு போலக் கட்புலன் காண நிற்கும் அரசன் வழித்துமாகி அவனாற்காக்கப்படுதலின், அரசனும் இறைவன் எனப்படுவானாயினான். இக் கருத்தானே, 'நெல்லு

---

* திருக்குறள் **தண்டபாணி விருத்தியுரை**, மறைமலையடிகள் மாணவர், நாகை. **சொ. தண்டபாணிப் பிள்ளை**யவர்களால் எழுதப் பெற்றது. அறத்துப்பால், தனி நூலாகக் கழக வெளியீடாக வெளி வந்துளது. பொருட்பாலுக்கு உரையெழுதி முடித்தற்கு முன்னர், ஆசிரியர் இவ்வுலக வாழ்வை நீத்தனர். கிடைத்த பகுதியைச் செல்வியில் இதுமுதல் வெளியிடுகின்றோம்.

முயிரன்றே நீரு முயிரன்றே - மன்ன னுயிர்த்தே மலர்தலை யுலகம்' (புறம்-கஅகூ) எனவும், 'திருவுடை மன்னரைக் காணிற் றிருமாலைக் கண்டேனே யென்னும்' (திருவாய்மொழி, 34-8) எனவும், 'அனைவோர்க்கும் தெய்வம் - இலைமுகப் பைம்பூணிறை' (நீதிநெறிவிளக். உஎ) எனவும் சான்றோர் கூறுவாராயினர்.

இனி, இவ் வதிகாரத்தில் அரசனதங்கமும், அவன் மாட்சியும், அம் மாட்சியாலாம் பயனும் முறையே கூறுவான் வைத்த ஆசிரியர் முதற்கண் அவனுக்கு அங்கமாவன இவையெனக் கூறுகின்றார் :

நஅக. படைகுடி கூழமைச்சு நட்பர ணாறு
முடையா னரசரு ளேறு.

(இ - ள்.) படை - படையும், குடி - குடிமக்களும், கூழ் - உணவுக்குக் காரணமான பொருளும், அமைச்சு - அமைச்சும், நட்பு - நட்பும், அரண் - அரணும், ஆறும் - (என்று சொல்லப் பட்ட) ஆறு அங்கங்களையும், உடையான் - உடையவன், அரசருள் ஏறு - அரசருள் சிங்கம்போல்வான். (எ - று.)

(இ - து.) அமைச்சு, அரண், பொருள், படை, நட்பு, குடி என்னும் ஆறங்கங்களையுடையவனே அரசன். (எ - ம்.)

அமைச்சு, அரண், பொருள், படை, நட்பு, குடி என நிற்பதே முறையாயினும், ஈண்டு முறைபிறழ்ந்து நின்றன செய்யுளாதலின். இவற்றை அங்கமெனல் வடநூல் வழக்கு. 'ஆறுமுடையான்' என முற்றும்மை கொடுத்துக் கூறியவதனால், அவற்றுள் ஒன்று குறையினும் அரசன் மாட்சி குறையும் என்பதாயிற்று. ஆசிரியர் பரிமேலழகர் குடியினை நாடென்றார். நாட்டை அகப்படுத்தியதே அரணாதலின் நாடு அரணுள் அடங்குதலானும், குடிமக்கள் இல்வழி ஏனை அங்கங்கள் இருந்தும் அரசு நடாத்துமாறில்லை யாதலானும், குடிமக்கள் இயல்பினை ஆசிரியர் குடிமை முதற்கயமை யீறாகப் பதின்மூன் றதிகாரங்களான் விதந்தோதுதலானும், பொருட்பா லியலதி காரத்தொகை கூறிய போக்கியாரும் நாடு கூறும் அதிகாரத்தை அரணியலின் அடக்கி 'உருவல் லரணிரண்டு' எனக் கூறினா ராதலானும் குடியென்பதற்கு நாடெனப் பொருள்கோடல் பொருந்தாமை காண்க. ஈண்டுக்கூறிய இவ் வாறங்கங்களையும் பின்னர் ஆறியல்களாக வகுத்து விரித்துரைப்பர்.

அரசனுக்கு அங்கமாவன கூறிய திது. (க)

அரசனது மாட்சி கூறுவன வருநான்கு குறள்கள்.

௩௮௨. அஞ்சாமை யீகை யறிவூக்க மிந்நான்கு
மெஞ்சாமை வேந்தற் கியல்பு.

(இ - ள்.) *வேந்தற்கு - அரசனுக்கு, இயல்பு - இயல்பாவது, அஞ்சாமை - நெஞ்சங் கலங்காமையும், ஈகை - கொடையும், அறிவு - அறிவும், ஊக்கம் - ஊக்கமும், இந் நான்கும் - (என்னும்) இந்த நான்கு குணங்களும், எஞ்சாமை - இடைவிடாது நிற்றல்.* (எ - று.)

(இ - நு.) *அரசனுக்கு மனவுறுதியும் கொடையும் அறிவும் ஊக்கமும் எப்பொழுதும் இருக்கவேண்டும்.* (எ - ம்.)

ஊக்கம் - உள்ளக் கிளர்ச்சி. அஞ்சாமை முதலியன வேந்தர்க்கு எப்பொழுதும் இருக்கவேண்டுமென்பார் 'எஞ்சாமை வேந்தற் கியல்பு' என்றார். எஞ்சாமை - குறையாமை.

வேந்தற் கியல்பாக வேண்டுவன நான்கு கூறியதிது. (௨)

அந் நான்கொடு சேரற்பால பிறகூறுவது வருங்குறள் :

௩௮௩. தூங்காமை கல்வி துணிவுடைமை யிம்மூன்று
நீங்கா நிலனாள் பவற்கு.

(இ - ள்) *நிலன் ஆள்பவற்கு - நிலத்தினை ஆளும் வேந்தனுக்கு, (முற்கூறிய நான்கேயன்றித்) தூங்காமை - சோம்பாமையும், கல்வி - கல்வியுடைமையும், துணிவுடைமை - துணிவுடைமையும், இம்மூன்றும் - (என்னும்) இம்மூன்றும், நீங்கா - (ஒருபொழுதும்) நீங்கா (வாகல்வேண்டும்.)* (எ - று.)

(இ - நு.) *சோம்பாமையும் கல்வியும் மனத்துணிவும் அரசனுக்கு எப்பொழுதும் இருக்கவேண்டும்.* (எ - று.)

தூங்காமை சோம்பாமையாதல், சோம்பலைத் தூக்கத்தொடு வைத்தெண்ணி 'நெடுநீர் மறவி மடிதுயி னான்குங் - கெடுநீரார் காமக் கலன்' (௬௦௫) என ஆசிரியர் மேற்கூறுமாற்றாற் பெறப்படும். தூங்காமை கல்வி துணிவுடைமை என இக்கூறிய மூன்றும் முறையே ஊக்கம் அறிவு அஞ்சாமை என முற்குறளிற் போந்த மூன்றனையுஞ் சார்ந்து அவற்றிற்கு உபகாரப்பட்டு நிற்கும். 'மூன்றும்' என்பதில் உம்மை முன்சென்ற நான்கையுந் தழுவலின் இறந்தது தழீஇயவெச்சவும்மை.

இவையிரண்டு பாட்டானும் அரசனது மாட்சிக்கு ஆங்குணம் கூறப்பட்டது.

அக் குண நிகழ்தற்குரிய ஆறு கூறுவது வருங்குறள் :

ரு௪௪. அறனிழுக்கா தல்லவை நீக்கி மறனிழுக்கா
மான முடைய தரசு.

(இ - ள்.) அறன் இழுக்காது - அறத்தின் வழுவாதொழுகி, அல்லவை நீக்கி - அறமல்லவற்றை ஒழித்து, மறன் இழுக்கா - வீரத்தின் வழுவாத, மானம் - பெருந்தன்மையினை, உடையது அரசு - உடையவன் அரசன். (எ - று.)

(இ - நு.) அறமும் கெடாமல், பாவமும் வாராமல், வீரமும் பழுதுபடாமல், மானமும் குலையாமல் அரசமாட்சிக்குரிய குணங்களை நிகழ்த்துபவனே அரசன். (எ - று.)

அறமாவது, இல்லறத்தார்க்குரியவாக முன் விதித்தவற்றைச் செய்தல்; அல்லவை நீக்கலாவது ஆண்டு விலக்கியவற்றை ஒழிதல். அறனென்றது இல்லறத்தையாதல் எற்றாற் பெறுதுமெனின் 'அறனெனப் பட்டதே யில்வாழ்க்கை' (குறள், ௪௯) என்றதாற் பெறுதும். வேந்தற்கியல்பெனக் கூறிய அஞ்சாமையும் துணிவுடைமையும் வீரத்தின்பாற் படுதலின் அவ்வீரத்தை நிகழ்த்தாவழி அரசன் மாட்சி குறைந்து மானங்கெடும். வீரத்தின் வழிப்பட்டு மிகை செய்தவழி அறங்கெடும். இவ்விரண்டுங் கெடாமே வீரத்தைச் செய்யவேண்டு மென்பார் மறத்தை இடைப்பெய்துரைத்தார். அரசர்க்கு வீரம் இன்றியமையாதேனும் அஃது அறத்தின் வழிப்படவேண்டுமென்பார் 'அறனிழுக்கா தல்லவை நீக்கி' யென விதிமுகத்தானும் மறைமுகத்தானும் அதனை முதற்கண் கூறினார். இக் கருத்தானே சங்கத்துச் சான்றோரும் 'மாண்ட - அறநெறி முதற்றே யரசின் கொற்றம்' (புறம், ருரு) என்றார். 'அறனிழுக்காவறன்' 'மறனிழுக்காவறன்' என அரசற்கு அறனுமறனு மியைய வருதலின் அரசற்குரிய அறம் மறநிலையறமாயிற்று. இக்கருத்தானே யாம் முன்னர் அன்புடைமையென்னு மறங் கூறியவழி 'அறத்திற்கே யன்பு சார்பென்ப வறியார் - மறத்திற்கு மஃதே துணை' (குறள், எசு) என்றதூஉ மென்க

அரசற்குரிய மறநிலையற மாட்சி கூறியதிது. (௪)

மறநிலையறத்தின் வழிப்பட்ட பொருளாளுமாட்சி கூறுவது வருங் குறள் :

ரு௪ரு. இயற்றலு மீட்டலுங் காத்தலுங் காத்த
வகுத்தலும் வல்ல தரசு.

(இ - ள்.) இயற்றலும் - (பொருளாவனவற்றைச்) செய்தலும், ஈட்டலும் - (அவற்றைச்) சேர்த்தலும், காத்தலும் -

(அவற்றைக்) காத்தலும், காத்த - காத்தவற்றை, வகுத்தலும் - (வரிசையறிந்து) கொடுத்தலும், வல்லது அரசு - வல்லவனே அரசன். (எ - று.)

(இ - து.) பொருளைச் சேர்த்து காத்து வகையறிந்து செலவிட வல்லவனே அரசன். (எ - ம்.)

பொருளாவனவற்றை என்பது வருவித்துரைக்கப்பட்டது. பொருளாவன, மணி பொன் நெல் முதலாயின. 'உறுபொருளு முல்கு பொருளுந்தன் னொன்னார்த் - தெறுபொருளும் வேந்தன் பொருள்' (குறள், எருசு) என்பதால் அரசன் பொருளியற்று மாறு பெறப்படும். 'அறனீனு மின்பமு மீனுந் திறனறிந்து - தீதின்றி வந்த பொருள்' (குறள், எருச) என்பவாதலானும், 'பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும் - பொருளல்ல தில்லை பொருள்' (குறள் - எருக) என்பவாதலானும், 'பொது நோக்கான் வேந்தன் வரிசையா நோக்கி - னது நோக்கி வாழ்வார் பலர்' (குறள், ருஉஅ) என்பவாதலானும், இயற்றிய பொருளை யீட்டிக் காத்து வகுக்குங்கால் அறத்தின்பொருட்டும் பொரு ளின் பொருட்டும் இன்பத்தின் பொருட்டும் வரிசையறிந்து வகுக்கவேண்டு மென்பதாயிற்று. ஆலயமெடுத்தல் அறக்கூழ்ச் சாலை யமைத்தல் முதலாயின அறத்தின்பொருட்டும், அமைச்சு முதலிய அங்கத்திற்காவன செய்தல் பொருளின்பொருட்டும், செய்குன்று இளமரக்கா முதலியன அமைத்தல் இன்பத்தின் பொருட்டுமாம்.

இவை நான்கு பாட்டானும் அரசனது மாட்சியே கூறப் பட்டது. (ரு)

மாட்சியொடு பயனுங் கூறுவன வரும் ஐந்து குறள்கள் :

௩அசு. காட்சிக் கெளியன் கடுஞ்சொல்ல னல்லனேன்
மீக்கூறு மன்ன னிலம்.

(இ - ள்.) காட்சிக்கு எளியன் - (குடிகள்) காணுதற்கு எளியனாய், கடுஞ்சொல்லனல்லனேல் - (எஞ்ஞான்றும் யார் மாட்டும்) இன் சொலுடையனுமானால், மன்னன் நிலம் - அவ் வேந்தனது நாட்டை, மீக்கூறும் - (பிறநாடுகள் பலவற்றினும்) உயர்த்திப் பேசும் (உலகம்.) (எ - று.)

(இ - து.) எளிதிற் காணப்படுவனும் இன்சொலுடைய வனும் உள்ள அரசனை உலகம் புகழும். (எ - ம்.)

(தொடரும்)

காவியக் காதல்

[திரு. பி. எல். சாமி, பி. எஸ். ஸி.]

(செல்வி, சிலம்பு உக, பரல்-ந. பக்கம் கஉஉ-இன் தொடர்ச்சி)

உயர்ந்த காவியமும் சிறந்த காதலியும் பல முறைகளில் ஒத்திருக்கின்றனர். காவியம் பல முறை 'பயில் தொறும் நூல் நயந்' தந்து புத்தின்பந் தருகின்றது சிறந்த காவியத்தைப் படிக்கப் படிக்கப் புது நயங்கள் தோன்றும். அறிய அறிய அறியாமையைக் காட்டும், சிறந்த நூல்கள். இலையேல் வள்ளுவர், செகப்பிரியர் போன்றோர் நூலகளில் புதுப் புது நலங்கள் தோன்றிக்கொண்டே இருக்காது. படிக்குந் தொறும் புத்தின்பமும் புத்தறிவும் தரும் சிறந்த நூல்களுக்கு என்றும் அழிவே யில்லை. அதுபோன்றே சிறந்த காதலி பழகுந்தொறும் புது நலம் தந்து, புத்தின்பம் ஊட்டுவாள். உலகில் எவையெவை வேண்டுகின்றோமோ அவையவையுமாகி, எத்தனை இன்பங்களுளவோ அத்தனையுமாகி, வேட்டதைத் தந்தும் கேட்டதெல்லாம் ஈந்து உதவுவாள் காவியக் காதலி. வள்ளுவரும்,

"கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியு மைம்புலனு
மொண்டொடி கண்ணே யுள"

"வேட்ட பொழுதி னவையவை போலுமே
தோட்டார் கதுப்பினாள் தோள்"

என்ற குறள்களில் இதையே கூறியுள்ளார்.

"உறுதோ றுயிர்தளிர்ப்பத் தீண்டலாற் பேதைக்
கமிழ்தின் இயன்றன தோள்"

என்ற குறளில் தொடுந் தொறும் புத்துயிர் அளித்து, விடுந் தொறும் சாகாட்டை நாடும்படி செய்பவள் என்று கூறுகின்றார்.

அத்தகைய காவியக் காதலி உலகப் பேரழகி கிளியோபத்ரா. மூக்கும் முழியுமாக இருந்த அவளிடத்தில் அழகு கொட்டிக் கொழித்தது. கிளியோபத்ராவின் மூக்கின் நீளம் அரை விரல்கிடை குறைந்திருக்குமானால் உலக வரலாறே மாறியிருக்கும் என்று ஒருவர் கூறினார். அவள் விரல் வளையத்தில் வைத்திருந்தாள், அண்டோனியோ, சீசர் ஆகிய மன்னர்களை. 'காற்றில் ஏறி அவ்விண்ணையும் சாடுவோம், கிளியோபத்ராவின கடைக்கண் பணியிலே' என்று அண்டோனியோ பாடினான். வீரன் அண்டோனியோ கிளியோபத்ராவை மண்டியிடச் செய்ய ரோமிலிருந்து படையுடன் வந்தான். வெற்றியுடன் எகிப்தில் நுழைந்தான். தனது அரசியல் அடிமை கிளியோபத்ராவை

பிடித்துவரும்படி ஆணையிட்டான். வந்தாள்! கண்டாள்!! வென்றாள்!!! அஃதாவது கிளியோபத்ராவை கண்ட அளவில் அண்டோனியோ அவளுடைய காதலடிமை ஆனான். "ஒண்ணுதற் கோஒ உடைந்ததோ ஞாட்பினுள் நண்ணாரும் உட்கும் என் பீடு" என்று அண்டோனியோ சொல்லவேண்டியதாயிற்று. 'நீரோரன்ன' கிளியோபத்ராவின் சாயல் "தீயோரன்ன" அவன் உரனை அவித்தது. அண்டோனியோவும் சீசரும் கிளியோபத்ராவை அறிய வந்தார்கள். அடைய வந்தார்கள். ஆனால், அவர்கள் அவளை முழுவதும் அறிய முடியவேயில்லை. தங்கள் அறியாமையை அறியுந்தொறுங் கண்டார்கள். மல்லரிடம் மலைத்தறியா மன்னர்கள் மலரினும் மெல்லியவளிடம் மலைத்தனர். காரணம் கிளியோபத்ரா காவியக் காதலைக் கற்றுத் துறை போகியவள். அவள் காவியக் காதலி. செகப்பிரியர் 'அண்டோனியாவும் கிளியோபாத்ராவும்' என்ற காவியத்தில் வெகு அழகாக கிளியோபாத்ராவை வர்ணித்துள்ளார்.

> "Age cannot wither her, nor custom stale
> Her infinite variety; other women cloy
> The appetites they feed, but she makes hungry
> Where most she satisfies: for vilest things
> Become themselves in her."

வயது அவளை வாட வைக்காது. பழக்கம் அவளது மாறும் புதுமையைப் புளிக்க வைக்காது. பிற பெண்கள் தெகட்டலாம். ஆனால், எப்போது அவளிடத்தில் இன்பத்தின் எல்லையை எய்தினோமென்று உணர்வானோ அக்கணமே அதன் குறைவை உணர்த்தி ஆசையைக் கிளறுவாள் என்று அழகாகக் கூறியுள்ளார்.

தமிழிலக்கியத்தில் காவியக் காதலியாகக் கருதத் தக்கவள் மாதவியே. காதலில் கண்ணகி தோற்றாள். மாதவி வென்றாள். காரணம் மாதவி கோவலனுக்கேற்ற காவியமாகத் திகழ்ந்தாள். கண்ணகிக்கு அது தெரியவில்லை. கோவலன் அழகுணர்ச்சி நிரம்பியவன். மாறாத கண்ணகி புளித்தாள். ஆனால், மாறி மாறிக் கோலங்காட்டிய மாதவி இனித்தாள். அருங்கலைகளை மாதவிபால் கண்டான் கோவலன். வீணைச் செல்வம் அவனிடமிருந்தது. ஆடல் பாடலில் ஈடுபாடுடைய கோவலன் மாதவியின்பால் 'விடுதலறியா விருப்பினன்' ஆகியதில் வியப்பொன்றுமில்லை. காதற் காவியத்தை கரைத்துக் குடித்தவள் மாதவி. இல்லறமன்றிப் பிறிதொன்றறியாள் கண்ணகி. ஊடலும் கூடலும் துனியும் புலவியும் கோவலனுக்குக் காட்டத் தெரிந்தவள் மாதவி. இளங்கோ 'ஆடலும் கோலமும் அணியுங் கடைக்கொள ஊடற் கோலமொடு இருந்தோனுவப்ப' என்று மாதவி

யைப் பற்றிக் கூறுகின்றார். கிளியோபத்ரா அண்டோனியோ வைச் சிரித்துச் சிரித்து ஊடலில் ஆழ்த்தி சிரித்துக் கூடலில் கூட்டினாள் என்று செகப்பிரியர் சொல்வதை நோக்கவேண்டும்.

> " நிலவுப்பயன் கொள்ளு நெடுநிலா முற்றத்துக்
> கலவியும் புலவியுங் கோவலர்க் கெதிரி
> கோலங் கொண்ட மாதவி.............. "

என்று இளங்கோ மாதவியின் காதல் திறமையைக் காட்டுகின்றார். முப்பத்திரண்டு ஓமாலிகை ஊறின நீரில் குளித்து அகிற் புகையில் கூந்தலை உலர்த்திக் கத்தூரி ஊட்டி, அணிகலன் பூட்டி, நீலச் சாதரை உடுத்தி கோவலனைக் களிப்பூட்டினள் மாதவி. கலவியும் புலவியும் கோவலற்கு அளித்து, மலைப்பும் திகைப்பும் கொடுத்து அவன் அறிதொறும் செறிதொறும் அறியாமை யைக் காட்டினாள் மாதவி. காலமும் பழக்கமும் காதலனுக்கு உவர்ப்பூட்டாதபடி உவப்பூட்டத் தெரிந்தவளே காவியக் காதலி. இதையே வள்ளுவர்,

> " அறிதோ றறியாமை கண்டற்றாற் காமஞ்
> செறிதோறுஞ் சேயிழை மாட்டு "

என்ற அருமையான குறளில் அழகாகக் கூறியிருக்கின்றார்.

காவியக் காதலி அறியும்படி திறந்த புத்தகமல்ல. பார்த்த அளவில் புரியும்படியான காவியமும் அல்ல அறியுந்தொறும் அறியாமையை ஊட்டி, படிக்குந்தொறும் புத்தின்பந் தந்து, புரியாத புது நயங்கள் புதைந்துள்ள புத்தகமே காவியக் காதலி. அவள் என்றுமே அருந்தித் தெகுட்டாத விருந்து. பழக்கம் புளிக்க வைக்காப் புதுமை. காலம் கருகவைக்கா இளமை. கேட்டதும் வேட்டதும் காட்டும் கவின்பெறு மந்திரப் பொற் பெட்டகம். இறுதியில் அவள் செறியுந்தொறும் அறியுந் தொறும் அறியாமையை அறிவிக்கும் அணங்கு.

பெண்ணின் அழகில் வியப்புத் தோன்றுகிறது. அவள் ஓர் உணர்வு வடிவான அணங்கு. அழகு வடிவான மயிலாகின் றாள். அஃதாவது அவள் ஓர் அழகுப் புதுமை. தொடர் பில்லாத அவர்களது அன்புபற்றி ஒரு வியப்புத்தோன்றுகிறது. அப்போது அவள் ஒரு அன்புப் புதுமை. இறுதியில் அவள் அறியுந்தொறும் அறிய முடியாப் புதுமையாக இருக்கின்றாள். அஃதாவது அவள் ஓர் அறிவுப் புதுமை. ஆக காவியக் காதலி அழகுப் புதுமையாகவும், அன்புப் புதுமையாகவும், அறிவுப் புதுமையாகவும் இருக்கவேண்டும். அவளிடை அவனிடைத் தோன்றும் காதலும் காவியக் காதலாகிறது.

வள்ளுவர் நாள்

[கழகப் புலவர், சித்தாந்த பண்டிதர், ப. இராமநாத பிள்ளை அவர்கள்]

பொதுமறை

உலகம் போற்றும் ஒப்பில் ஒருவராம் திருவள்ளுவநாயனார், திருநான்மறையின் பிழிவாகிய திருக்குறள் என்னும் செந் தமிழ்ப் பொதுமறை தந்தருளியவர். அம்மறை எக்காலத்துக் கும், எம்மொழியார்க்கும், எந்நெறியினர்க்கும், எப்பால வர்க்கும், எந்நாட்டவர்க்கும் ஒப்பமுடிந்த உலகப் பொதுமறை யாய்த் திகழ்கின்றது. அப்பெருமானை என்றும் நினைவு கூர்ந்து தொழுதுவருகின்றோம். அத் தொழுகையினை ஆண் டுக்கு ஒருமுறை சேர்ந்தும் தனித்தும் சிறப்பாகக் கொண்டாடு வதற்குப் பொருத்தமான ஒரு தமிழ்த் திருநாள் அமைத்தல் வேண்டும். அத் திருநாளினைத் தமிழகத்தாரும், இலங்கை, கடாரம், மலேயா, சிங்கப்பூர், தென்னாப்பிரிக்கா, வட இந்தியா முதலிய இடங்களில் வாழும் தமிழ்நன் மக்களும், உலகத்தா ரனைவர்களும் அன்பினால் ஒருங்கு கொண்டாடுதல்வேண்டும். அந்நாள் ஆட்சியாளர் விடுமுறை நாளாக விளங்குதல் வேண்டும்.

வாய்ப்புநாள்

கல்வியும், அறிவும், ஒழுக்கமும், உழைப்பும், ஒற்றுமையும், ஊக்கமும், செல்வமும், செழிப்பும், சேர்ந்துவாழ் திறனும், அன்பும், உதவியும், ஆண்டவன் நினைவும், ஆன்றோர் வழிபாடும், ஆண்மையும் தோன்றப் 'பொங்கு மங்களம் எங்கும் தங்கும் நாள் பொங்கல் திருநாளேயாம்.' பொங்கல் திருநாள் தமிழர் தனி நாகரிகப் பண்பாடு உணர்த்தும் சால்புநிறை பெருநாள். அந்நாள் தைமாதப் பிறப்பு என்றும், மாதப்பிறப்பு என்றும் வழங்கப்பெறும். மாதப்பிறப்பு என்பதே சிற்றூர், பேரூர், நாடு, நகர மக்கள் அனைவர்களாலும் நவிலப்படும் நன்மொழி. இதனாலேயே தமிழர்தம் தனியாண்டுப் பிறப்புத் தைத்திங்கள் என்பது ஐயுறவின்றித் துணியலாகும்.

தைமாதப் பிறப்பில் புதுவிளைவுப் பொருள்களும், புதுப் பாண்டமும், புத்துணர்ச்சியும், புது மகிழ்வும், மக்கள் அனைவர் களும் வேற்றுமையில்லாது கூட்டுறவு முறையில் ஒற்றுமையுறு தலும், புத்தாடை உடுத்தலும், முற்றத்துப்பொங்கல் இடுதலும், இல்லைஎன்னாது ஈத்துவத்தலும், சுற்றம்சூழலும் மற்றும் பிறவும்

மேற்கொண்டு எல்லாரும் இன்புற்று ஒழுகிவருகின்றனர். நெறி முறையிற் பார்க்கினும் படைப்பின் தோற்றம் தைப்பிறப்பை ஒட்டியே காணப்பெறும். எனவே, தமிழாண்டுத் தொடக்கம் தைத்திங்கள் முதலாகக் கணக்கெடுப்பதுவே சாலப்பொருத்த மும் முறைமையும் ஆகும். அம் முறைபற்றிப் பல ஆண்டு களாக நம் திருவள்ளுவ நாயனார் திரு ஆண்டு தைத்திங்கள் முதல் கணக்கிடப்பட்டு வருகின்றது. இம்முறை, தமிழுக்குத் தனிவரம்பாய் எவ்வகையாற்றலும் குறைவிலா நிறைவாய் மும் மொழிப் புலமையும் செம்பொருட்டுணிவும் சேர்ந்து திகழ்ந்து மறைந்த மறைமலையடிகளாரால் நிறுவப்பட்டதாகும். இப் பொழுது வள்ளுவர் யாண்டு ஆயிரத்துத் தொள்ளாயிரத்து எண்பத்தைந்து என வழங்கிவருகின்றோம். இது கிறித்துவ யாண்டுடன் முப்பத்தொரு யாண்டுகள் கூட்டிக் கணக்கிடுவ தால் அமைவதாகும்.

தொன்மைத் தமிழக ஆண்டு ஆவணிமுதல் கணக்கெண் ணப்பட்டு வந்ததாகத் தெரிகின்றது. இஃது ஒல்காப் பெரும் புகழ்த் தொல்காப்பியத்துள் ஐந்திணை வகுத்து, அவற்றிற்கு முதல் கரு உரிப்பொருள்கள் வகுத்து மேற்கொண்ட முறைமை யாலும் வலியுறும். அது :

" காரும் மாலையும் முல்லை குறிஞ்சி
கூதிர் யாமம் என்மனார் புலவர்."

(தொல். பொருள். அகத். கூ.)

எனவரும் நூற்பாவாகும். கார்காலமே ஆண்டுத் தொடக் கம் என இந் நூற்பாவின்கண்ணும் காண்க. கார்காலம் என் பது ஆவணியும் புரட்டாசியுமாகும். உலகவழக்கின்கண்ணும் ஆடி அறுதி எனப் பயின்று வருவதும், சிறப்புக் கொண்டாடி வருவதும் சில இடங்களில் இன்றும் நிகழ்கின்றன. ஆடி அறுதி எனவே ஆவணி ஆண்டுத் தொடக்கம் என்பதும் தானே பெறப் படும். கார்காலமே உடனுறை வாழ்க்கைக்கு ஏற்ற உரியகாலம் என்பது ஆன்றோர் துணிபு. அக்காலம் வெப்பமும் தட்பமும் மிகாது இடைநிகர்த்தவாய் நீரும் நிழலும் பயந்துள்ள சீருடைக் காலம் என்க. இனி ஆசிரியர் நச்சினார்க்கினியாரும், " கால வுரிமை எய்திய ஞாயிற்றுக்கு உரிய சிங்க ஓரை முதலாகத் தண் மதிக்கு உரிய கற்கடக ஓரை ஈறாக வந்து முடியுந்துணை ஓர் யாண்டு " என இந் நூற்பா உரையின்கண் கூறியுள்ளனர்.

தொல்லோர் சென்ற நெறிவழியே தென்தமிழ்ப் பகுதிக் கண் புதுவதாக அமைத்த கொல்லம் என்னும் நகர்த் துவக்கக் கணக்கு ஆவணித் திங்கள்முதல் கையாளப்பட்டு வருகின்றது.

இப்பொழுது கொல்லம் யாண்டு ஆயிரத்து ஒருநூற்று முப்பஃ தென்ப. ஐயுறுப்பாகிய பஞ்சாங்கத்துக் கணக்கு எடுக்கப்பட்டு வருவது சித்திரை முதலாகும். இவ் யாண்டு தொடர்ந்து எண் கணக்கு அமைக்க ஒண்ணுதவாறு பெயர்முறையான் அமைக்கப் பெற்றுள்ளது. அப் பெயரும் கிழமை, திங்கள், நாள் முதலியன போன்று பிரபவ முதல் அட்சய ஈறாக அறுபதாகக் காணப்படு கின்றது.' இக் கணக்கால் தொடர்பெண் காண்பது எங்ஙனம்?

தைத்திங்கள் பொங்கல் விழாவுடன் மட்டும் அமையாது தொன்றுதொட்டுக் கன்னிப்பெண்கள் நாடு வளமுறவும் நற் பண்பு வாய்ந்த மணமகன் தங்கட்கு எய்தவும் நோன்பிருந்து தாயுடன்கூடி நீராடவும் செய்வர். அச் செயல் 'பரிபாடல், ஐங் குறுநூறு, நற்றிணை, கலித்தொகை முதலிய சங்க மருவிய தொகைநூற்கண் நல்லிசைப் புலவர்களால் பாராட்டப் பெற் றுள்ளது. இந் நோன்பும் நீராட்டும் திருவாதிரை நோன்பும் மார்கழிநீர் ஆடலும் எனத் தற்போது வழங்கப்படுகின்றன. அதற்குக்காரணம் முன்நாளில் மாதங்களைத் திங்கள்வழி அளவை யாகவும் கொண்டு வழங்கிவந்துள்ளனர். அம்முறையில் மார்கழித் திங்கள் மதிநிறை நன்னாள் தொட்டுத் தைத்திங்கள் ஆகும். எனவே, மார்கழித்திங்களில் இப்பொழுது செய்யும் நீராடல் பண்டையோர் கணக்குப்படி தைந்நீராடலே ஆகும்.

நாண்மீன்களுள் திருவாதிரை செம்மீன் எனச் சிறப்பாக அழைக்கப்படும். அம்மீன் இன்றும் வானில் பொன்போல் மிளிர்வதைக் காணலாம். மார்கழித் திருவாதிரைத் திருநாள் முழுமுதல்வன் விழுமிய முதல்வியோடு வெளிப்பட இயைந்து உலகத் தோற்றத்தின் பொருட்டு அம் முதல்வியை இயக்கும் தனித் திருநாளாகும். திருவாதிரைத் திருநாள் பத்து நாள் விழா ஆதலின் திருவாதிரைக்கு முன் ஒன்பது நாட்களுக்கும் ஆற்றல் ஒன்பதும் வெளிப்படுங் குறிப்பாகும். ஆற்றல் ஒன் பதும் நவசத்தி எனப்படும். திருவாதிரைத் திருநாள் உலகத் தோற்றத் திருநாளாகும். அந்த முறையில் திருவாதிரைத் திரு நாளுக்குக் களி என்னும் தமிழகச் சீர்சால் உணவு படைக்கப் படுகின்றது. இதற்குத் திருவாதிரைக் களி என்னும் பெயரும் வழங்கி வருகின்றது.

இதனால் தைப் பொங்கல் திருவிழாத் தமிழகத் தனிப் பெருவிழா என்பது தானே போதரும். பொங்கல் விழாவின் முதல்நாள் ஞாயிற்றுப் பொங்கலும், இரண்டாம் நாள் மாட்டுப் பொங்கலும், மூன்றும் நாள் ஆன்றோர்களைப் போய்க் காணும் காட்சிச் சிறப்பும் தமிழகம் எங்கணும் நிகழ்ந்து வருகின்றன. ஞாயிற்றுப் பொங்கல் கடவுளின் அறிவிற்கும், மாட்டுப் பொங்

கல் கடவுளின் ஆற்றற்கும், ஆன்றோர் காட்சி கடவுளின் அன்புக்கும் அடையாளமாகக் கொண்டாடப் பெறும் குறிப்பாகும்.

அன்பின் குறிப்பாம் ஆன்றோர் காட்சி விழாவை அன்புப் பிழம்பாம் திருவள்ளுவ நாயனார் திருவிழாவாகக் கொண்டாடப் பெறுவது முறைமையும் சிறப்பும் ஆகும். உலகப் பொதுச் சான்றோரும் தமிழகச் சிறப்புச் சான்றோரும் வள்ளுவரேயாவர். அவரினுமிக்கார் உளரென உள்ளவும் ஒண்ணுவரோ அறிஞர் ? ஆகவே அந்நாளை வள்ளுவர் நாள் ஆக அனைத்துலகமும் கொண்டாடப் பெறுமாறு செய்வதும் தமிழ்மண்டல ஆட்சி விடுமுறை நாளாக்குவதும், அதற்கு வேண்டுவன செய்வதும் நம் அனைவர்களின் பெருங்கடமையும் உரிமையும் ஆகும். ஆட்சி விடுமுறைக்கு நாம் அனைவரும் ஒருமுகப்பட்டு ஒத்த கருத்தினராய் வேண்டிக்கொள்வோமாயின் மிகவும் எளிதாய் உடனே நடைமுறைக்குக் கொண்டுவரும் பேறு செவ்விதாய் அமைந்துவிடும். இந்நாளை வள்ளுவர் நாளாகக் கொண்டாடுவதற்கு வேறு எவ்வகையான தடங்கலும் ஏற்படுவதற்கு இடன் இல்லையென்றே நம்புகின்றேம். அங்ஙனம் அமைக்க அனைவர்களையும் ஒத்துழைக்குமாறும் ஏனை அன்பர்கள் அனைவர்களுக்கும் உணர்த்தி உழைக்கச் செய்யுமாறும் உதவ வேண்டுகின்றோம். இதுபோல் வாய்ப்புடைத் திருநாள் வேறொன்று அமைவது அருமையாகும். இது தமிழன்பர்கள் பலர்க்கும் ஒத்த கருத்தாகவும் உள்ளதென்பது அவர்கள் பேச்சாலும் எழுத்தாலும் காணலாம்.

இப்பொழுது வள்ளுவர் திருநாள் இருவேறு வகையாகக் கொண்டாடப் பெறுகின்றது. ஒன்று மாசி உத்திரம். இது, யாழ்ப்பாணத்து ஆறுமுகநாவலர் பெருமானாரால் மேற்கொள்ளப்பட்டது. மற்றொன்று வைகாசி அனுசம். இது திருவள்ளுவர் திருநாள் கழகத்தாரால் கைக்கொண்டதாகும். ஏறத்தாழ மூந்நூறு நானூறு ஆண்டுகளுக்கு முன்னுள்ளதாகத் தோன்றும் மயிலாப்பூர்த் திருவள்ளுவர் திருக்கோயிலில் இவ்விரண்டும் நிகழ்கின்றன. இவ்விரண்டு நாட்களுக்குள் வைகாசி அனுசமே பெருவரவிற்றாகக் கொண்டாடப்படுகின்றது. அங்ஙனம் கொண்டாடுவோரையும் மனமொத்து இணங்கித் தை மூன்றும் நாளாக இனிக் கொண்டாடிவரும் படியாகக் கேட்டுக் கொள்கின்றோம். இலங்கை முதலான வெளி நாட்டின் உள்ளாரையும் இங்ஙனமே கொண்டாடி வரும்படி வேண்டிக்கொள்கின்றோம். நிகழ்ந்து வருவதை மாற்றுவது பலருக்குப் புதிது போன்று காணப்படும். புதிது அல்ல என்பதும் முன்னும் ஒரு முறை மாற்றப்பட்டுள்ளதென்பதும் பலரறி உண்மையாகும்.

புளிய மரம்

[திரு. சு. அ. இராமசாமிப் புலவர்]

புளியமரப் பெருமைதனைச் சங்க நூல்கள்
புகழ்ந்தோதும் வகையதனைப் புரிந்தி டாமல்
எளியமரம் ஆகஇந்த உலகந் தன்னில்
இலங்கியது நிற்கின்ற தன்மை கொண்டு
அளியின்றி அம்மரத்தை அழித்து நாளும்
அடுப்புவிற காக்கிடவே அந்தோ இந்தக்
களியளிக்கும் புளியின்விலை கனமாய்க் கூடி
கவலைகொள நிற்கின்ற தன்மை பாரீர். (க)

வெல்லவிலை தனிலும்அது மேலாய்ச் சென்று
வெல்லவிலை யா? அதுதான் வெல்லந் தன்னை
நல்லமனத் தோடின்று நான்உ மக்கு
நவிலுகிறேன் ஒருமொழிதான் நாடி நின்று
பொல்லாத புளியின்விலை புவியில் நன்கு
பொன்விலையாய்ப் போய்விட்ட தாகை யாலே
எல்லாரும் புளியங்கண் இரண்டெ டுத்து
இப்புவியில் நடத்தொடங்கின் இனிமே லேனும். (உ)

நடுங்கவைக்கும் புளியின்விலை கீழே போகும்
நாடுபுகழ் சோழவள நாட்டி லேயும்
கடுங்காற்று வீசியதால் கணக்கி லாமல்
கண்டபடி புளிமரங்கள் வீழ்ந்து விட்ட
நெடுங்கடல்சூழ் பேருலகில் இனியும் முன்போல்
நிலைத்துநின்று புளிவிளங்க நினைப்பீ ராகில்
எடுங்களுட னேபுளியங் கொட்டை தன்னை
இதுஉமக்கு உறுதிதர இயம்பி னேனே. (ங)

செய்திகளும் குறிப்புக்களும்

(க) தமிழ் ஆட்சிமொழியாக வேண்டும்

கடந்த 21—11—54ல் தல்லாகுளம் அருகே உள்ள இடத்தில் புதிதாக அமைக்கப்பட்ட காமராசர்நகர் பெயர்ப் பலகையைத் தமிழ்நாடு காங்கிரசுக் குழுத்தலைவர் திரு. எல். எஸ். கரையாளர் திறந்து வைத்தார். இந்த விழாவிற்கு மதுரை மாவட்டக் காங்கிரசுக் குழுத்தலைவர் திரு. டி. ஜி. கிருஷ்ணமூர்த்தி தலைமை வகித்தார்.

முதலமைச்சர் திரு. காமராசரவர்கள் தமக்களிக்கப்பட்ட வரவேற்புகளுக்குப் பதிலளிக்கும் வகையில் பேசியபோது, "மதுரையில் தமிழ்ச் சங்கங்கள் இருக்கின்றன, இலக்கியங்களுக்குப் பெயர் பெற்ற இடம் மதுரை. தமிழ்மொழி ஆட்சிமொழியாக இருக்கவேண்டும். பிற மொழிகளில் உள்ள இலக்கியங்களைத் தமிழில் மொழிபெயர்க்க வேண்டும். ஆர்வமுள்ள தமிழறிஞர்கள் இந்த வேலையைச் செய்ய முன்வரவேண்டும். மதுரைத் தமிழ்ச்சங்கத்தார் இப் பணியைச் செய்தால் மிகவும் சிறப்பாக இருக்கும். அல்லது யார் வேண்டுமானாலும் இப் பணியில் ஈடுபடலாம். இப் பணியைச் செய்ய யார் முன்வந்தாலும் அவர்களுக்கு அரசாங்கம் உதவிசெய்யத் தயாராக இருக்கிறது. அரசாங்கத்திற்கு இருக்கும் அதிகப்படியான வேலைகளால் இதுபோன்ற பணிகளைக் கவனிக்க இயலாது போய்விடுகிறது. தமிழ்மொழியில் ஆர்வமுள்ளவர்கள் யாராக இருந்தாலும் இப்பணியைச் செய்ய முன்வர வேண்டுகிறேன்" என்று கூறினார்.

குறிப்பு: தமிழ் ஆட்சி மொழியாக வேண்டும் என்று கூறும் முதலமைச்சரின் முறைமையும் மொழிப்பற்றும் பாராட்டற்குரியவே. அமைச்சர் போன்றார் அடுத்து முயன்றால் ஆகாதனவும் உளவோ?

(உ) திரு. ஓமந்தூரார் கருத்துரை

கடந்த 4—12—54-ல் சென்னை அரசாங்க மேல்அவையில் ஆட்சித்தலைவர் சொற்பொழிவின்பின் பலர் பேசினர். அக்காலை முன்னாள் முதலமைச்சர் திரு. ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார் அவர்கள் கூறியதாவது:

"இப்பொழுது இம்மாநில ஆட்சியே நடைபெறுகிறது. தாய்மொழி ஆட்சிமொழியாக இருக்கவேண்டும். மனமிருந்தால் வழியுண்டு. மாநில முழுதும் தமிழை ஆட்சிமொழியாகக் கொண்டுவருவது இயலாததாயின் மாவட்ட வரிசையாகவாவது தாய்மொழியை ஆட்சிமொழியாக்க முற்படவேண்டும்"

குறிப்பு: ஓமந்தூராரின் கருத்துரை கருத்தாழமுடையது. தமிழ் ஆட்சிமொழி ஆவதற்கு ஆட்சியாளரின் உள்ளப்பாங்கே தடையாக உளது எனில் அது மிகையாகாது. அந்தநிலை மாறவேண்டும்.

(ங) புதிய கல்வித் திட்டமும் புது முயற்சியும்

சென்னை மாநில, துவக்கக் கல்வித் திட்டத்தை ஆராய்ந்து கருத்துரை வழங்குவதற்கென, டாக்டர் அழகப்பச் செட்டியாரவர்கள் தலைமையில் ஆய்வுக்குழுவொன்றை ஆட்சியாளர் நிறுவியுள்ளனர். புதிய கல்வித்திட்டம் பற்றிய இப்புது முயற்சி, அரசியல் சட்டத்தில் குறிப்

பிடப்பட்டுள்ள காலவரையறைக்குள் கட்டாயக் கல்வியை நடைமுறைக்குக் கொண்டு வருவதாகும் என்றும், அந்த நோக்கத்துடன், இம்மாநிலத்திற்கேற்ற சிறந்ததொரு திட்டத்தை இக்குழு தயாரிக்கும் என்றும் சொல்லப்படுகிறது. அடுத்துவரும் பள்ளிக்கூடப் புத்தாண்டில் இத்திட்டம் நடைமுறைக்கு வரும் வகையில் முயற்சிகள் நடைபெறுகின்றன. இத்திட்டத்தை ஆராய நிறுவப்பட்டுள்ள குழுவின் விவரம் வருமாறு :—

டாக்டர் ஆர். எம். அழகப்பச் செட்டியார் (தலைவர்), சென்னைக் கல்வித்துறை இயக்குநர், திரு. என். டி. சுந்தர வடிவேலு; திரு. எஸ். மீனாட்சிசுந்தர முதலியார், கலைமகள் கல்வி நிலையம், ஈரோடு; திரு. கோ. அருணாசலம், பி. கே. என். ஸ்ரீராமகிருஷ்ண வித்தியாலயா, கோயம்புத்தூர்; திரு. எம். அருணாசலம், பி. கே. என். உயர்நிலைப் பள்ளி, திருமங்கலம்; திரு. வி. எஸ். கோபாலகிருஷ்ண ஐயர், எம். சி. டி. எம். உயர்நிலைப்பள்ளி, சென்னை.

குறிப்பு : துவக்கக் கல்வித் திட்டத்தில் சீர்திருத்தம் காண விழையும் ஆட்சியாளரின் முயற்சியை வரவேற்கிறோம் - பாராட்டுகிறோம். ஆனால் உருவாகப்போகும் புதுத்திட்டம் தமிழக மக்களுக்குக் கல்வித் துறையில் அனைவரும் முன்னேற ஒத்தவாய்ப்பளிக்கும் உயரிய திட்டமாக இருக்குமா என்பதைப் பொறுத்திருந்து காண்போம். புதிய திட்டத்தை நன்கு விளம்பரப்படுத்திக் கல்வித்துறை அறிஞர்கள் ஒப்புதல் பெற்றுப் பின் ஓர் ஆண்டு கழித்தே நடைமுறைக்குக் கொண்டுவருதல் வேண்டும்.

மதிப்புரை

ஞானாமிர்தம்

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தார் வெளியீடாக, க. **'ஞானாமிர்தம்'** உ. **'பரதசங்கிரகம்'** ௩. **'கோங்குநாட்டு வரலாறு'** ௪. **'தமிழிலக்கியம்'** என்னும் அழகமை நூற்கள் நான்கு வரப்பெற்றோம். அவற்றுள் **'ஞானாமிர்தம்'** சிறந்த பழைமைவாய்ந்த தமிழ் நெறிப் பண்பாட்டின் செம்பொருட்டுணிவை விளக்கும் சிறந்த பெரு நூலாகும். செம்பொருட்டுணிவெனினும் சித்தாந்தம் எனினும் ஒன்றே. இதன் பதிப்பாசிரியர், சித்தாந்த கலாநிதி, பேராசிரியர், வித்துவான். திரு. ஔவை, சு. துரைசாமிப் பிள்ளையவர்கள் (தியாகராசர் கல்லூரி, மதுரை) நன்முயற்சி பெரிதும் பாராட்டத்தக்கது.

இந்நூல் சிறந்த முன்னுரை முதலியவற்றோடு அருஞ்சொற்பொருள் அகர நிரல் ஈறாக ஏறத்தாழ அறுநூறுபக்கங்களைக் கொண்டது. செந்தமிழையும் செந்நெறியாம் சித்தாந்த சைவத்தையும் மெய்யுணர்வுடன் தொல்லோர் ஓம்பிய எல்லையிகவாது, நல்லமுறையில் பல்லாற்றானும் கேட்டோரும், கண்டோரும் நாட்டம் மருள ஓம்பிவரும் 'திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் பத்தொன்பதாம் பட்டத்து எழுந்தருளிய ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சாமி நாதத் தம்பிரான்சுவாமி அவர்கள்தம் நிழலுருவத்திருமேனியும் இருபதாம் பட்டத்து எழுந்தருளியுள்ள ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள் நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் தம் நிழல் உருவத்திருமேனியும், இராஜராஜ அபயகுல சேகர சோழ

மகாராஜா (கி. பி. 985—1013) அவர்தம் உருவத்திருமேனியும் கண்கவர் வனப்பினதாய் இதன்கண் திகழ்கின்றது.

நூலாசிரியர் **வாகீச** முனிவரனார் ஆவர். இவர்தம் இயற்பெயரும் பிறவும் விளக்கமுறத் தோன்றற் கிடனின்றெனத் தெரிகின்றது. இவர்தம் ஆசிரியர் பரமானந்த முனிவராவர். இவர் சென்னையை அடுத்துள்ள கோடலம்பதியில் (கோடம்பாக்கம்) வீற்றிருந்து சித்தாந்த சைவத்தைப் பரப்பியருளினர். பின் கோனகி சந்தானக் கிளையாம் திருநெல்வேலி மாவட்டத்துத் திருவாலீச்சுரத்துத் திருமடத்துக்குத் தலைவராயினர். இவர், இரண்டாம் இராசாதிராசன் காலத்திருந்தவர் எனத் தெரிவதால் பன்னிரண்டாம் நூற்றாண்டாகலாம். இதன் உரைகாரரைப்பற்றி ஏதும் தெரிவதற்கிடனின்றென்ப.

நூல் சித்தாந்தக் கருவூலமாகிய இறைவன் நூலாம் மெய்யுணர் ஆகமங்களின் பிழிவாய்த்திகழ்கின்றது. எழுபத்தைந்து செவ்விய அகவற் பாக்களையுடையது. அவ்வகவற்பாக்கள் நான்கடிச் சிறுமையும் ஐம்பத்தாறடிப் பெருமையும் கொண்டனவாக ஆயிரத்து எழுநூற்று நான்கடிகளோடு திகழ்கின்றன. "சம்மியஞானம்" முதலிய பல பெரும்பிரிவுகளையும், "உயிர்கட்குப் பற்றாவது பரமன் சீர்பாதம்" முதலிய பல உட்பிரிவுகளையும் கொண்டுள்ளன. இதன் நடை சங்கமிருந்து தமிழாராய்ந்த நல்லிசைப்புலவர் நடையேயாகும். முப்பொருள் உண்மையினை இத்துணைச்செம்மையாக பண்டைத்தண்டமிழ் நடையில் யாத்த வண்டமிழ் நூல் வேறு ஏதுங் காண்டலரிது. மெய்ப்பொருள்களை (தத்துவப் பொருள்களை)த் தூயதமிழ் நடையில் யாத்த முதற்பெரும் நூலும் இதுவேயாகும். அம்மட்டோ வடமொழிக்கண்ணுள்ள சிவகாம நூற்பொருளும் கருத்தும் செந்தமிழின் பாற்பட யாத்தாலன்றித் தென்றமிழ் நாட்டார்க்கு நின்று நிலவும் பயன்தராதென மன்றுள்ளார் திருவருளால் உணர்ந்து மொழிபெயர்த்துப் பின்னுளார்க்கு வழிசெய்த பெருங்குறிக்கோளும் உடையதாகும். இது சிவஞான போதத்துக்கும் காலத்தால் முற்பட்டது.

இந்நூலைச் செந்தமிழ் அன்பர்களும் சித்தாந்தச் செந்நெறிச் செல்வர்களும், மெய்ப்பொருள் வேட்கையுடைய பெருமக்களும் இந்நூலை வாங்கியும், வாங்குவித்தும், கற்றும், கற்பித்தும் தமிழகநெறி முறை கண்டு பெருமை கொண்டு உலகிடைப் பரப்பவேண்டுவது அவரவர் தம் உயரிய உயிர்க் கடனாகும். 'ஞானத்தின் மிக்க கொடையின்மையான்' இந்நூல் பரவத் துணைசெய்வது பிறவிப்பயனாகும். இந்நூலையும் இது போன்ற செம்மைசான்ற பிற நூல்களையும் ஓவாது வெளியிட்டுச் செந்தமிழ் ஓம்பிவரும் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தார்க்குத் தமிழுலகம் என்றென்றும் கடமைப்பட்டுள்ளது. காலச் செவ்வி நோக்கிச் சாலச் சிறந்த இந்நூலை ஏற்ற காலத்து வெளிப்படுத்தியமை பாராட்டத் தக்கது. அழகிய எழுத்து, நிறைந்த அடிக்குறிப்பு, சிறந்த கட்டடம். இதன் விலை ரூபா. 3-4-0.

திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக்
கழகத்திற்காக, சென்னை 2-140, பிராட்வே,
அப்பர் அச்சகத்தில், திரு. வ. சுப்பையா அவர்களால்
அச்சிட்டு வெளியிடப்பெற்றது. ஆசிரியர்: வ. சுப்பையா.

மறைவு:

30—12—1954



குன்றக்குடி அடிகளார் 27—12—1954 அன்று சென்னை சைவசித்தாந்த
நூற்பதிப்புக் கழக விற்பனை நிலையத்துக்கு எழுந்தருளிக்
கழக நூல்களைப் பார்வையிட்டருளல்.



குன்றக்குடி அடிகளார் சென்னை அப்பர் அச்சகத்துக்கு எழுந்தருளி அச்சுப்பொறியைப் பார்வையிட்டருளல்.



குன்றக்குடி அடிகளார் கழகத்துக்கு எழுந்தருளிய நினைவுக் காட்சி.

உட்கார்ந்திருப்பவர்: (இடமிருந்து வலம்) 1. அடிகளாரின் செயலாளர், திரு. கே. எம். சுப்பிரமணியம், 2 திரு. கு. அருணசலக் கவுண்டர், 3. கழக ஆட்சிப்பொறுப்பாளர், **திரு. வ. சுப்பையா பிள்ளை,** 4. **குன்றக்குடி அடிகளார் சிவத்திரு. அருணசல தேசிக பரமாசாரிய சுவாமிகள்,** 5. திரு. ப. இராமநாத பிள்ளை, 6. திரு. செ. ரெ. இராமசாமி பிள்ளை, 7. மேலாளர், **திரு. வள்ளிநாயகம் பிள்ளை.**

நிற்பவர்: கழக, அச்சக அலுவலாளரிற் சிலர்.